# வெண்ணிலா

ISSN 2792 - 1050

காலாண்டிதழ்.
QUARTERLY.

වෙණ්ණිලා - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.


பேராசிரியர்
கலாநிதி அமீர் அலி.


மறைந்த
கவிஞர் அப்துல் காதர் லெப்பை.


சிரேஷ்ட ஊடகவியலாளர்
எம்.ஐ.எம். முஸாதிக்.


கவிப்பொய்கை
ஜவ்ஸன் அகமட்.


எழுத்தாளர்
ஏ. எம். ஹஸ்புள்ளா.


கவிஞர்
மருதமுனை ஹஸன்.


ஒவ்வொரு
இதழும்
ஒரு
கவிதைத்
தொகுதி...


இலக்கிய செயற்பாட்டாளர்
றியாஸ் குரானா.

முப்பத்தி மூன்று
கவிஞர்களின்
முத்தான
முப்பத்தி மூன்று
கவிதைகள்...

இதழ்: 08 ஜனவரி 2023. விலை: ரூபா. 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Jesa Grafix

Graphic Designing & Printing

***No. 289, Main Street, Maruthamunai***

**PHOTOCOPY**
**TYPESETTING**
**GRAPHIC DESIGNING**
**OFFSET PRINTING, LAMINATING**
**BINDING, STATIONARY**
**PHONE CARDS**
**RELOADS**
**&**
**MUCH MORE SERVICES**
**at Cheapest rates.**

# 075 656 9393

**jesagrafix24@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா

வெண்ணிலா - கவிதை மஞ்சரி.
VENNILA - Poetry Inflorescence.

காலாண்டிதழ் ISSN 2792 - 1050

2வது ஆண்டு நிறைவு இதழ்: 08 - ஜனவரி 2023.


வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.


**ஆசிரியர்:**
**கவிஞர் எஸ் ஏ கப்பார்**
kavignarsagaffar@gmail.com

**முகவரி:**
**378/2, ஸம் ஸம் வீதி,**
**மருதமுனை - 03 # 32314,**
**இலங்கை.**

**மின்னஞ்சல்:**
vennilakavithaimanjari@gmail.com
**தொடர்பு:**
07 5858 5656 / 077 6968 671.
**வட்ஸ்அப்:**
077 6968 671.


•••


**Digital Printing:**
S. A. Jezeem,
Jesa Grafix,
Main Street, Maruthamunai.

**Information Technology:**
A. G. Afraan Muhammed
(University of Ruhuna.)

**Layout Design:**
S. A. Abdul Gaffar DICP, DIHE & DIEC.

**Published by:**
Digital Information System (DIS)


**சந்தா விபரம்:**

தனி இதழ் ரூபா. 50/= நான்கு இதழ்களுக்கான ஆண்டுச் சந்தாத் தொகை ரூபா. 200/=. வெண்ணிலா அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்த முடியும்.

தபாலில் பெற்றுக்கொள்ள தபால் செலவு உட்பட நான்கு இதழ்களுக்குமான ஆண்டுச் சந்தாத் தொகை ரூபா. 600/= மட்டுமே.

**நீங்கள் செய்யவேண்டியது:**

Mr. S. A. ABDUL GAFFAR, BANK OF CEYLON, A/C No.: 6106068 என்ற இலக்கத்திற்கு ரூபா. 600/= சந்தாத் தொகையைச் செலுத்திவிட்டு உங்கள் முகவரி மற்றும் விபரங்களை kavignarsagaffar@gmail.com என்ற எமது மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 0776968671 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கோ அனுப்பி வைக்கவும்.

**அட்டையில்:**

மறைந்த கவிஞர் அப்துல் காதர் லெப்பை.
பேராசிரியர் கலாநிதி அமீர் அலி.
சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். ஐ. எம். முஸாதிக்.
இலக்கிய செயற்பாட்டாளர், எழுத்தாளர், கவிஞர் றியாஸ் குரானா.
கவிஞர் மருதமுனை ஹஸன்.
எழுத்தாளர், கவிஞர் கவிப்பொய்கை ஜவ்ஸன் அகமட்.
எழுத்தாளர், கவிஞர் ஏ. எம். கஸ்புள்ளா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


**ஆசிரியர் பக்கம்:**

- மூன்றாவது ஆண்டை நோக்கி... - இதழாசிரியர்........5

**கட்டுரைகள்:**

- போராட்டச் சிந்தனைகள் - எழுத்தாளர் எம். ஐ. எம். முஸாதிக்........7
- வாசிப்பால் உயர்வோம் - கவிப்பொய்கை ஜவ்ஸன் அஹமட்........11
- ஈழத்து முஸ்லிம்களின் சிற்றிதழ்கள் - கவிஞர் ஏ. எம். கஸ்புள்ளா........32

**தடம்பதித்த மூத்த கவிஞர்கள்:**

- கொள்ளி சொருகுவதேன்? - கவிஞர் மருதமுனை ஹஸன்........15

**மஞ்சரி கவிதைகள்:**

- மௌன திராட்சை ரசம் - கவிதாயினி Dr. ஜலீலா முஸம்மில்........16
- இறப்பின் செய்தி - கவிதாயினி ஷிபானா அஸீம்........17
- சொல் - கவிஞர் ரோஷான் ஏ ஜிப்ரி........18
- மழை நீர் - கவிஞர் காரையன் கதன்........19
- தொடர் பயணம் - கவிஞர் ஏ. எம். கஸ்புள்ளா........19
- பெரும் நதி - கவிஞர் மன் கபூர்........20
- என்னருகில் நீயிருந்தால் - கவிஞர் எழுகவி ஜலீல்........21
- உடைந்த நம்பிக்கை - கவிஞர் எல். வஸீம் அக்ரம்........21
- எங்கள் மொழியே! - கவிஞர் பாரதி மைந்தன்........22
- வற்றிய நதியின் கரையில்... - கவிஞர் வசந்த தீபன்........23
- ராஜகவியின் பாடல் - ராஜகவி ராகில்........24
- சக்தியொன்றே! - கவிஞர் செம்மைத்துளியான்........26
- துணிவு - கவிதாயினி இமையி........27
- வண்ணமற்ற வாழ்க்கை - கவிதாயினி மாஹிரா ஹமீட் அஸ்ஹர்........28
- ஒளியற்ற நிழல்! - கவிதாயினி கமலாதேவி தனபாலன்........29
- கானல் நீர் - கவிஞர் சிக்கந்தர் அகமது........29
- தலைவர் வேண்டும் - கவிஞர் மருதூர் ஜமால்தீன்........30
- ஏற்றாத விளக்குகள் - கவிஞர் மருதமுனை முனாஸ்........30
- என் ஜீவனே... - கவிதாயினி சுமதி........31

**படித்தவற்றில் பிடித்தவை:**

- மாயத் தோற்றம் - கவிஞர் சம்மாந்துறை சந்தக்கவி........36
- பறவைகள் - கவிஞர் ஏ. தேவராஜன்........36
- மழைக்காலத்து வாழ்க்கை - கவிஞர் கே. பாலன்........37
- முதுமை - கவிஞர் ரத்னா........38
- என்னைப் பற்றி நானே! - கவிஞர் அ. முத்துசாமி........39
- நேசத்திற்குரிய தனிமை! - கவிதாயினி சிமாரா (ஊதாப்பூ)........40
- தோற்ற பொழுதொன்றில் - கவிதாயினி வானம்பாடி முஜா........40
- தனிமை - கவிதாயினி மாலதி வெங்கடேசன்........41
- காலப் பெருநதி - கவிஞர் தீரன்........41
- சொற்கள் - கவிதாயினி கனியமுது அமுதமொழி........42
- பரிச்சய முகமூடிகள் - கவிஞர் ராம்ப்ரசாத்........42
- அப்பா - கவி செல்வா........43
- குறத்தியின் முத்தம் - கவிஞர் எச். ஜி. ரசூல்........43

**முகநூல் பதிவு:**

- கவிதை... - கவிஞர் றியாஸ் குரானா........44





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பை மேம்படுத்துவதும், புதிய பல கவிஞர்களை உருவாக்குவதுமே எமது நோக்கம்.

# மூன்றாவது ஆண்டை நோக்கி...

எல்லாம் வல்ல இறைவனுக்கே முதற்கண் நன்றி. புகழனைத்தும் அவனுக்கே சொந்தம்.

வெண்ணிலா கவிதை மஞ்சரி எட்டாவது காலாண்டிதழ் - இரண்டாவது ஆண்டு நிறைவு இதழாக வெளிவந்துள்ளமை மிக மகிழ்ச்சியாக உள்ளது. ஒரு சஞ்சிகையினை குறிப்பிட்ட கால இடைவெளிகளில் தொடர்ச்சியாக வெளியிடுவது எவ்வளவு சிரமம் என்பது அனுபவ ரீதியாக புரிந்து கொண்ட உண்மை. அதுவும் இக்காலகட்டத்தில் அச்சுப் பதிப்பாக வெளியிடுவது என்பது மிகச் சிரமமான ஒரு விடயம்.

**வெண்ணிலா:**

1978 ஏப்ரல் 10 ஆம் திகதி வெண்ணிலா என்ற பெயரில் கலை இலக்கியச் சஞ்சிகை ஒன்றினை 'காவியன்' என்ற புனைப் பெயரில், எனது பாடசாலை நாட்கள் முதல் இன்று வரை நல்ல நண்பனாகத் திகழும் சட்டத்தரணி எம். எம். எம் அபுல் கலாம் அவர்களுடன் சேர்ந்து, அச்சுப் பிரதியாக வெளியிட்டேன். தற்போது நண்பர் பிரித்தானியாவில் தொழில் நிமித்தம் குடும்பத்தினருடன் வசித்து வருகிறார். தொடர்ந்து எங்களால் 12 இதழ்களை வெளியிட முடிந்தது. சிறுகதை, கவிதை, நாடகம், கலைஞர் பேட்டி போன்ற ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு இதழ்கள் வெளிவந்தன.

**வெண்ணிலா கவிதை மஞ்சரி:**

2021 ஏப்ரல் 10 ஆம் திகதி முதல் மீண்டும் 43 வருடங்களின் பின் வெண்ணிலா சஞ்சிகை, வெண்ணிலா கவிதை மஞ்சரி என்ற பெயரில் காலாண்டிதழாக வெளிவந்து எட்டாவது இதழ் - இரண்டாவது ஆண்டு நிறைவு இதழாக இன்று உங்கள் கைகளில் தவழ்கிறது. ஆக வெண்ணிலாவுக்கு வயது 45.

**நன்றி மறப்பது நன்றன்று:**

இவ்வேளை, வெண்ணிலா கவிதை மஞ்சரியின் தொடர்ச்சியான வருகைக்கு பல வழிகளிலும் ஆதரவு வழங்கும் சந்தாத்தாரர்களுக்கும், விளம்பர அனுசரணையாளர்களுக்கும் முதலில் நன்றி கூறுவதோடு அவர்களது ஆதரவினை தொடர்ந்தும் எதிர்பார்க்கிறோம். மேலும் அவ்வப்போது ஆக்கங்களை வழங்கியும் நல்ல பல கருத்துக்களை வழங்கியும் எதிர்கால வளர்ச்சிக்கான அருமையான ஆலோசனைகளையும் வழங்கி ஊக்கப்படுத்தும் இலக்கியச் செயற்பாட்டாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், வாசகர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

ஒவ்வொரு இதழினதும் வெளியீடு சம்பந்தமான செய்திகளை தேசிய பத்திரிகைகளில் பிரசுரித்து உதவும் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சங்க தலைவர், மூத்த ஊடகவியலாளர் கலாபூஷணம் பி. எம். எம். ஏ. காதர் அவர்களுக்கும் நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அச்சுப்பதிப்பு மற்றும் தொழில்நுட்பம்:**
சஞ்சிகை அச்சிடும் தாள், மை, ஏனைய பொருட்களின் எதிர்பாராத இமாலய விலையேற்றத்தின் போதும் தன்னலம் பாராது ஒவ்வொரு இதழையும் அழகிய முறையில் உரிய நேரத்தில் அச்சிட்டுத் தரும் எனது இளைய சகோதரர் ***Jesa Grafix*** உரிமையாளர் எஸ். ஏ. ஜெஸீம் அவர்களுக்கும், தகவல் தொழில்நுட்ப உதவிகளை வழங்கி வரும் எனது இளைய மகன் ஏ. ஜி. அப்ரான் முஹம்மத் (ருகுண பல்கலைக்கழகம்) அவர்களுக்கும், இதழினை வெளியிடும் டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினருக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

**சஞ்சிகை வடிவமைப்பு:**
சஞ்சிகை வடிவமைப்பு என் பொறுப்பு. பிரான்ஸிலிருந்து வெளிவரும் பொன் விழாக் கண்ட **தமிழ் நெஞ்சம்** மாத இதழின் ஆசிரியர் தமிழ் நெஞ்சம் அமின் முகம்மத் அவர்கள் அடிக்கடி இணைய வழி மூலம் தொடர்பு கொண்டு பல ஆலோசனைகளை வழங்கி வருகின்றார்கள். நண்பருக்கு மனமார்ந்த நன்றிகள்.

**இவ்விதழில்:**
33 கவிஞர்களின் முத்தான 33 கவிதைகள் வெளியாகின்றன. ஒவ்வொரு இதழும் ஒரு கவிதைத் தொகுதியாகும்.

● இளங்கவிஞர், எழுத்தாளர், இலக்கிய செயற்பாட்டாளர் **கவிப் பொய்கை ஜெளஸன் அஹமட்** அவர்களின் 'வாசிப்பால் உயர்வோம்' என்ற அருமையான ஒரு கட்டுரை வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றது.

● எழுத்தாளர், கவிஞர் **ஏ. எம். ஹஸ்புள்ளா** அவர்களின் 'ஈழத்து முஸ்லிம்களின் சிற்றிதழ்கள் - ஒரு பார்வை' சிறப்புக் கட்டுரையாக வெளிவருகிறது. "தரப்பட்ட தகவல்கள் குறைவாகக் கொண்டிருப்பினும் எதிர்காலத்தில் பிறருக்கு பயன்படும் என்ற நோக்கத்தில் எழுதப்பட்டது" என்கிறார் கட்டுரை ஆசிரியர்.

● "கவிதை என்பது பில்லி சூனியம் செய்வினை" என்கிறார் இலக்கிய செயற்பாட்டாளர், எழுத்தாளர், கவிஞர் **றியாஸ் குரானா** அவர்கள். ஏனைய இலக்கிய வாதிகளில் நின்றும் வேறுபட்ட ஓர் எழுத்தாளர், வித்தியாசமான விமர்சகர். அவரது எழுத்துக்கள் ஆழமானவை. சிந்தனையைத் தூண்டுவதோடு, சிலவேளை வாசிப்பவர்களை இடியப்பச் சிக்கலுக்குள் சிக்கவைத்து விடுவதும் உண்டு. அவரது அருமையான முகநூல் பதிவு ஒன்று இவ்விதழை அலங்கரிக்கின்றது.

● நாடறிந்த எழுத்தாளர், பத்திரிகையாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர், ஆசிரிய ஆலோசகர் எனப் பல ஆளுமைகளைக் கொண்ட வரும் கண்டியில் நிரந்தரமாக வசித்துவருபவருமான மருதமுனையைச் சேர்ந்த **எம். ஐ. எம். முஸாதிக்** அவர்களின் 'போராட்டச் சிந்தனைகள்' கட்டுரை சிந்தனையைத் தூண்டும் விசேட கட்டுரையாக இவ்விதழைச் சிறப்பிக்கின்றது.

● 'தடம்பதித்த மூத்த கவிஞர்கள்' தொடரில் **கவிஞர் மருதமுனை ஹஸன்** அவர்களின் 'கொள்ளி சொருகுவதேன்?' மரபுக் கவிதையினை வெளியிட்டு கவிஞரை கெளரவப்படுத்துகிறோம்.
நன்றி.

**- இதழாசிரியர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# போராட்டச் சிந்தனைகள்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்
**எம். ஐ. எம். முஸாதிக்.**

காத்தான்குடி மண்ணில் பிறந்து மாத்தளையில் மறைந்த கவிஞர் அப்துல் காதர் லெப்பை, 'பேராசிரியர் கவிஞர் அல்லாமா இக்பாலின் நகல்' என்று கூறின் அது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல. தன்னையே அல்லாமா இக்பாலாகக் கற்பனை செய்து கொண்டு அவர் வழியில் வாழ் நாள் முழுவதும் வாழ்ந்து முடித்தவர்.

அவரது சிந்தனை முன்னோட்டத்தில் கருத்தரித்து இலங்கை முஸ்லிம்களுக்கு அரசியல் முகவரி தந்த 'முஸ்லிம் காங்கிரஸின் பிதா மகனே அப்துல் காதர் லெப்பை' என்று கூறுவதே சிறப்புடையதும், திரிபுபடுத்தப் படாததுமான உண்மையாகும்.

கவிஞர் எம்.எச்.எம். அஷ்ர.ஃ.ப் அவர்கள் இந்த நாட்டில் 'பாக்கிஸ்தான் சிற்பி' முஹம்மது அலி ஜின்னாவாக வரவேண்டும்? என முதலில் கனவு கண்டவரே அப்துல் காதர் லெப்பை. அதனாலோ என்னவோ மாத்தளை மையவாடியில் எம்.எச்.எம். அஷ்ர.ஃ.ப் அவர்களே கபுறில் (அடக்கஸ்தலத்தில்) இறங்கி கவிஞர் அப்துல் காதரின் உடலை அடக்கம் செய்தோரில் முதல் வரிசையில் சேர்ந்து கொண்டார். அது மட்டுமல்ல, கவிஞர் அப்துல் காதர் நோயுற்ற போது அவரது இறுதி நாட்களில் அவர் கூடவே இருந்தவருமாவார். கவிஞர் அப்துல் காதரும், கவிஞர் எம்.எச்.எம். அஷ்ர.ஃ.ப் அவர்களும் படுத்துறங்கிய தலையணையும் சிந்தனைப் பரிமாற்றம் செய்த அறையும், கவிஞர் அப்துல் காதரின் பெறா மகனும் எனது




நெருங்கிய நண்பருமாக இருந்த ஆசிரிய ஆலோசகர் காலஞ்சென்ற ஐ. ஆப்தீனும், ஆப்தீனின் குடும்பமுமே முஸ்லிம் காங்கிரஸின் கருத்தரிப்புக்கான நிரந்தர சாட்சியாளர்களாவர்.

அதற்குரிய ஆவணங்கள் அனைத்துமே கவிஞர் எம்.எச்.எம். அஷ்ர.ஃ.ப் அவர்களால் அவரது கொழும்பு உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து அவர்களது கரங்களாலேயே என்னிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த ஆவணங்கள் விலைப் படுத்தப்படக் கூடிய அரசியல் வியாபாரப் பண்டமோ அல்லது கைமாற்றுப் பண்டமோ அல்ல. ஒரு முதிர்ச்சி பெற்ற சமூகத்தின் அரசியல் வரலாற்றை எடுத்தியம்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லியல் பெறுமானமிகு ஆவண மாகவே கருதுகின்றேன். இவைதான் முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்திற்கான உண்மையான வரலாற்றைத் திரிபுறாது எடுத்துக் கூறத்தக்கவை.

கவிஞர் அப்துல் காதர் பெற்ற ஒரே ஒரு தவப் புதல்வர்தான் பேராசிரியர் கலாநிதி அமீர் அலி. இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எனக்குப் பொருளியல் போதித்த விரிவுரையாளர். அத்தோடு எனது முதல் வருடத்தில் நான் இருந்த அக்பர் விடுதியில் பொறுப்பாளருமாகப் பணியாற்றினார். எம் இருவருக்குமான தொடர்பு நீண்ட நெடுங்காலங்களைத் தாண்டிவிட்ட போதிலும், ஆசிரியர் - மாணவர் என்ற நட்புறவு சமூகத்திற்கு நல்லதைச் செய்யத் தூண்டுகோலாக இருந்துள்ளது.

பேராசிரியர் கலாநிதி அமீர் அலி இரட்டைப் பிரசா உரிமை பெற்று மேற்கு அவுஸ்திரேலியாவின் பேத் நகரில் வாழ்ந்த போதும் அவரின் மூச்சும், பேச்சும் எழுத்துருவில் ஆங்கிலத்திலும், தமிழிலும் நம் நாட்டுத் தினசரிகள், இணையத் தளங்களில் கட்டுரை வடிவில் நர்த்தனமாடுகின்றன.

'இலங்கை முஸ்லிம்களும், இஸ்லாமும்' என்ற, கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் நூலில் கொழும்பில் வசிக்கும் எனது நெருங்கிய நண்பர் எம். பி. எம். ஜலீல் (இலங்கை வங்கியின் முன்னை நாள் உதவிப் பொது முகாமையாளர்) அவர்களது மனப் பதிவுகள் 'பேராசிரியர் கலாநிதி அமீர் அலி' யார்? என்பதைத் துல்லியமாக எடுத்துக் கூறுவதையும் காணமுடியும்.

கவிஞர் எம்.எச்.எம். அஷ்ர.்.ப் அவர்கள் தமது வாழ்நாளில் இறுதித் தறுவாயில் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் மௌனித்து வைக்கப்பட்ட ஓர் உண்மையை வெளிப்படுத்தும் வகையில் 'கவிஞர் அப்துல் காதர் லெப்பையும், முஸ்லிம் காங்கிரஸும்' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதி வெளியிடுமாறு என்னிடம் வேண்டுகோள் விடுத்தார். அவரது வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டிய தார்மீகக் கடப்பாடும் எனக்குண்டு என்பதை அறிவேன்.

பேராசிரியர் கலாநிதி அமீர் அலிக்கும் அவரது தந்தை கவிஞர் அப்துல் காதர் லெப்பைக்கும் (தந்தைக்கும், மகனுக்கும்) இடையிலான கருத்து முரண்பாடு எதில் என்பதை 'இலங்கை முஸ்லிம்களும் இஸ்லாமும் ஒரு சிந்தனையாளரின் பார்வை' என்ற நூலுக்கான அறிமுகவுரையில் விளக்கமாக எழுதியுள்ளார்.

இக் கட்டுரையாளரான நான் ஆசிரியராகவிருந்து வீரகேசரி நிறுவனத்தால் மாதம் இருமுறை வெளியிட்ட 'புதுயுகம்' சஞ்சிகையின் *15 வது இதழில் (15 பெப்ரவரி 2011) 31* ஆம் பக்கத்தில் 'போராட்டச் சிந்தனைகள்' என்ற விமர்சனத்தை எம். எப். ஸானாஸ் என்ற பெயரில் (எனது மகளின் பெயரில்) வெளியிட்டேன். அந்த நூலுக்கான ஓர் அறிமுகமே வெண்ணிலாவிலும் பிரசுரமாகின்றது. வெண்ணிலா ஆசிரியருடனான உரையாடலை அடுத்து அவரது வேண்டுகோளுக்கமையவே இவ் வருடத்திற்கான முதலாவது இதழ் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளேன்.

வெண்ணிலாவில் இடம் ஏற்படுமிடத்து புதிய தலைமுறையினரின் நலன் கருதி இந்த மூத்த கவிஞர் பற்றிய தொடர் கட்டுரைகளை எதிர்வரும் வெண்ணிலா இதழ்களில் எழுதவும் இணக்கம் தெரிவித்துள்ளேன்.

ஆய்வாளர்கள் மற்றும் கற்றறிந்தவர்களின் சிந்தனையைப் போராட்டத்துக்குள் சிறைப்பிடிக்கும் ஒரு தொகுப்பு நூல் 'போராட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைகள்'. கவிஞர் அப்துல் காதர் லெப்பையின் கட்டுரைகள், கவிதைகள் அடங்கிய இந்தத் தொகுப்பு நூல் அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிடப்பட்டது. இதன் தலைப்பே 'போராட்டச் சிந்தனைகள்'. இதனைக் காய்தல் உவத்தலின்றி ஊன்றிப் படித்த போது இந்தச் சிந்தனைதான் உயிர்த்துடிப்புப் பெற்றது.

கிழக்கிலங்கையின் காத்தான்குடி, கவிஞரின் பிறந்த மண். தனது இள வயதிலேயே பேராசிரியர் கவிஞர் அல்லாமா இக்பாலின் கருத்துக்களாலும், கவிதைகளாலும் ஈர்க்கப்பட்டவர் இவர். பன்முக ஆற்றல் கொண்ட இவர் கவிதை, கட்டுரை, இலக்கியம், மொழி பெயர்ப்பு, மனிதத்துவம் மிக்க ஆன்மீகக் கருத்துகள் ஆகியவற்றை அடித்தளமாகக் கொண்ட பத்துக்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ளார். அவரின் ஏக புதல்வரான கலாநிதி அமீர் அலியே 'போராட்டச் சிந்தனைகள்' என்ற நூலினைப் பதிப்பித்து, வெளிக் கொணர்ந்துள்ளார். அவுஸ்திரேலியா மேர்டொக் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் பேராசிரியராகத் தற்போது கலாநிதி அமீர் அலி பணியாற்றி வருகிறார்.

'எனது சிந்தனைகள் பாமரர்களுக்காக எழுதப்படவில்லை. படித்துச் சிந்திப்பவர்களுக்காகத்தான் எழுதப் பட்டது' என்ற கவிஞரின் அறிமுகத்துடன் தான் நூல் புதிய பரிமாணம் காட்டுகிறது. இறையடி சேர்வதற்கு நான்கு வருடங்கள் முன்னதாக அதாவது 1980 ஆம் ஆண்டு கவிஞர் மேற்கூறிய கருத்தினை அழுத்திச் சொல்லியிருக்கிறார்.

மாற்றம் என்ற சொல்லைத் தவிர இந்த உலகில் மாற்றம் பெறாதது எதுவுமே இல்லை என்பது பொது நிலைக் கோட்பாடு. இதனைப் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்றும் கூடச் சொல்வார்கள். மனித நாகரீகம் தோன்றி வளர்வதற்கு முன்னதாகவே மனிதன் காட்டு மிராண்டியாய், நாடோடியாய் வாழ்ந்த காலம் ஒன்றிருந்திருக்கின்றது. நாடோடி சமூக அமைப்பிலிருந்து ஆண்டான், அடிமைச் சமூகம், நிலப் பிரபுத்துவ சமூகம் முதலாளித்துவ சமூக அமைப்பு ஆகியன படிப்படியாகத் தோற்றம் பெற்றதாக மனிதவியல் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். இந்தப் படிமுறை வளர்ச்சிப் போக்கு மனித நாகரீகத்தில், கலாசாரத்தில், பண்பாட்டில் சமூக விழுமியங்களிலும் தாக்கங்களையும் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. சமயங்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல.

காலங் காலமாக இருந்து வந்த விக்கிரக ஆராதனையை நிராகரித்தே இஸ்லாம் தோற்றம் பெற்றது. கவிஞர் பெரும் ஆராய்ச்சியாளர். அல்லாமா இக்பாலின் சிந்தனைகளையும், இஸ்லாத்தின் வேத நூலான குர்ஆனையும் ஆழமாகக் கற்றவர். அவர் சுமார் பதினெட்டு ஆண்டுகளாக மேல் நாட்டுத் தத்துவங்களோடு இஸ்லாத்தை ஒப்பிட்டு ஆராய்ந்திருக்கின்றார். சமூகத்தில் புரையோடிப்போன தீய அம்சங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் அவர். இதனால் அவர் சர்ச்சைக்குரியவராகச் சிலரால் நோக்கப்பட்டார். பெண்கள் கொத்தடிமை களாக நடத்தப்படுவதற்கெதிராகக் கவிஞர் கொதித்தெழுந்தார். கோபம் கொப்பளிக்க அவர் எழுப்பும் கேள்விகளை வெறும் சர்ச்சைக்குரிய பொருளாக மட்டும் பார்க்கக் கூடாது. அதிலிருக்கும் நியாயங்களைக் கற்றறிந்தவர்கள் என்று சொல்பவர்கள் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். 'அந்தச் சிறுமி ஆயிஷா பீபியவள்' என்ற அவருடைய கவிதை வேலிக்குள் முடக்கப்பட்ட ஒரு பெண்ணின் அவலத்தை வெளிக் கொணருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதாசிகள், கணிகையர், அந்தப்புரம் போன்றவை ஆணாதிக்கத்தின் வெளிப்பாடுகள். இன்றும் கூடப் பெண், போகத்தின் அடிமைச் சின்னமாகவே பார்க்கப்படுகின்றாள் என்பது அங்கிங்கெணாதபடி எங்குமே வியாபித்திருக்கிறது.

கவிஞர் சொல்கிறார் "கலாசாரத்தின் ஒரு பகுதியே மொழியெனினும், அது தோன்றி வளர்ந்து பிற்பாடு அதுவே கலாசாரத்தின் ஜீவ நாடியாக மாறிற்று. அது எழுத்து வடிவைப் பெற்றதும் மொழியின்றிக் கலாசாரமே இல்லை என்ற அளவுக்கு இடம்பெற்று விட்டது. ஓர் இன மக்களின் மொழி அழியுமேல் அவ்வளவும் தன் தனித் தன்மையை இழந்து விடும் என்ற அளவுக்கு உருப்பெற்று விட்டது". எவ்வளவு ஆழமான உண்மையைக் கவிஞர் பட்டவர்த்தனமாகப் புட்டுக் காட்டுகிறார். இலங்கையின் இன முரண்பாடு கூர்ப்புப் பெற்றுக் கூர்மையடைந்து வக்கிர மோதலாக வெடித்தமையின் ஆதார சுருதியைக் கவிஞரின் இந்தக் கூற்று அழகாக விளக்கவில்லையா? தமிழையே வடக்கு, கிழக்கு வாழ் முஸ்லிம்கள் தமது பேச்சு மொழியாகக் கொண்டிருந்தாலும் முற்றிலும் வித்தியாசமான இன மோதலுக்குள் மாறுபட்ட கலாசாரத்தைக் கொண்ட இஸ்லாமிய மக்கள் வன்செயல் பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டதையும் கவிஞரின் கூற்றுக் காட்டுகின்றதல்லவா?

மற்றோர் இடத்தில் கவிஞர் இப்படியும் சொல்கிறார் "ஆத்மீக ரீதியில் போதிக்கின்ற ஒரு மதம், பக்தர்களைச் சாத்வீக ரீதியிலேயே மனந்திருப்ப வேண்டும். எதிரியை அழிப்பது கொண்டே உண்மையை விளக்குவதாயின் அதில் ஆத்மீகம் மட்டுமல்ல அரசியலும் கலந்திருக்குமென்றே நாம் கூறலாம்" எந்தளவு உண்மை. இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் சுமார் அறுபது இலட்சம் யூத மக்களை ஹிட்லரின் நாஸி இன வெறிக்குக் காவு கொடுத்த அதே யூதர்களின் ஸியோனிஸம் பாலஸ்தீன மக்களைக் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வேட்டையாடி வருகிறதே. ஆன்மீகத்தில் அரசியல் கலப்படம் செய்யப்பட்டதால் ஏற்பட்ட அபத்தத்தை இந்த இரண்டு இன சங்காரங்களுமே எடுத்துக் காட்டவில்லையா?. ஆப்கானிஸ்தானில் பாமியன் புத்தர் சிலையைத் தகர்த்தவர்களும் அரசியல் நோக்கம் கொண்டவர்களே.

அந்த நூலிலிருந்து பல விடயங்களைக் கோடிட்டுக் காட்ட முடியும். இட நெருக்கடி காரணமாக இந்த இரண்டு உதாரணங்கள் மட்டுமே காட்டப்படுகின்றன. இறுதி ஆராய்வில் சொல்வதானால் அப்பன் வெட்டிய கிணறு என்பதற்காக உப்பு நீரைக் குடிக்க முடியாது. உப்பு நீர் என்பதற்காக அப்பாவின் ஆணையையும் நிராகரிக்க முடியாது. இது தான் கவிஞரின் எழுத்துக்களில் தொனிக்கும் சாராம்சம். கவிஞரின் மகன் கலாநிதி அமீர் அலி, தனது நூல் அறிமுகத்தில் எடுத்துக் காட்டிய ஓர் எடுகோளினை இங்கு இறுதியாகச் சுட்டிக் காட்டுவது மிகப் பொருத்தமானது. "நடிகர் சிவாஜி கணேசன் இந்தியாவில் பிறந்தது தான் அவர் செய்த பாவமென்று பிரபல இந்தியத் திரைப்பட இயக்குநர் சத்ய ஜித்ரே ஓர் ஆங்கில நூலில் குறிப்பிட்டிருந்தார். அதே பாணியில் ஓர் இலை மறை காயாகவே வாழ்ந்து மறைந்த கவிஞர் அப்துல் காதர் லெப்பையும் இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பிறந்தது அவர் செய்த பாவமோ எனக் கருதத் தோன்றுகிறது." இப்படிக் கூறுகிறார் கலாநிதி அமீர் அலி. நியாயமாகச் சிந்திக்கக் கூடியவர்களின் கவனத்துக்கு இது சமர்ப்பணம்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பால் உயர்வோம்.

- கவிப்பொய்கை ஜவ்ஸன் அஹமட் -

"எழுத்தும் வாசிப்பும் ஒரு மனிதனை முழுமைப்படுத்தும்" என்ற முன்னோரின் வாசகத்திற்கு இணங்க 'வாசிப்பால் உயர்வோம்' எனும் தொனிப்பொருளில் ஒரு தொகுப்பை படைப்பதில் ஆனந்தமடைகிறேன்.

வாசிப்பு என்பது ஒரு சமூகத்தின் முதுகெலும்பு என்பதில் எனக்கு எந்தவித ஐயப்பாடும் இல்லை என்பதை உணர்த்தும் விதத்தில் அதன் முக்கியத்துவங்களையும், வாசிப்பை நேசிப்பது பற்றியும், எதனை வாசிப்பது என்பது பற்றியும், இன்னோரன்ன விடயங்களை நோக்கலாம் என நினைக்கிறேன்.

வாசகர்களே!
இறைவன் உலகில் முதலில் அறிமுகம் செய்த சொல் 'வாசிப்பு' முதலில் அறிமுகம் செய்த கருவி 'எழுதுகோல்' இவைகள் இரண்டையும் நாகரீக சமுதாயம் ஒன்றின் தனிப்பெரும் அடையாளங்களாக கருத முடியும்.

அறிவு என்ற திறமை வாசிப்பின் விளைவாக வருவது. அந்த அறிவுக்கு செங்குத்தாகவும் கிடை நிலையாகவும் இரு பரிமாணங்கள் உண்டு.

செங்குத்தாக அது தன்னை படைத்தவனை நோக்கி நிற்க வேண்டும் அவனது திருப்தியை கேட்க வேண்டும் அவனது கட்டளைகளை சிரமேற்க வேண்டும் அவனது அருட்கொடைகளை விசுவாசிக்க வேண்டும்.

கிடை நிலையாக அதன் பயன்பாட்டை நோக்குமிடத்து அது பூமியை பலப்படுத்த வேண்டும், மனித வாழ்வை செழுமைப்படுத்த வேண்டும் நன்மையை பரப்ப வேண்டும் பிற படைப்புக்களின் முன்னால் கர்வம் கலைந்து பணிவு கொள்ள வேண்டும்.

இவைகளை பார்க்கின்ற போது ஒரு மனிதனின் பரிணாம வளர்ச்சியில் பெரும் பங்கு செலுத்துவது அவனது வாசிப்பு என்பதில் எந்த விதமான ஐயப்பாடும் கிடையாது. வாசிப்பை தன் விருப்பமாகக் கொண்டவன் அவன் வாசிக்கின்ற மொழியில் தேர்ச்சி உடையவனாகவும் திறமை சித்தி அடையக்கூடியவனாகவும் மாறுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது.

எம்மிடையே பெரும்பாலானவர்கள் தங்களின் பொழுதுபோக்காக வாசிப்பை கொண்டவர்களாக காணப்படுகிறார்கள். ஆனால் உண்மையில் வாசிப்பு என்பது ஒரு பொழுதுபோக்கு அல்லாமல் தங்களின் வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. ஏனென்று சொன்னால் அப்படியான வாசிப்பால் மட்டும் தான் ஒரு கலாச்சாரத்தையும் அக்கலாச்சாரத்தின் விழுமியங்களையும் வளர்த்துக் கொள்ள முடியும்.

வாசிப்போ எம் வாழ்க்கை முறையாகி போக வேண்டும் மாற்றமாக நேரம் கிடைக்கும் போது அந்நேரத்தை பயனுள்ளதாக கழிக்க மட்டும் வாசிப்போ ஒரு கருவியாக அமைந்து விடக்கூடாது என்பதில் நாம் எல்லோரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இதற்காக வேண்டியே இங்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை உங்களுக்கு உணர்த்துகிறேன். இதை சுவாசித்து பாருங்கள்.

வாசிப்பு ஒரு தனி மனிதனுக்கு மிக முக்கியமான ஒன்று என்பதையும் அது ஒருக்காலும் பொழுது போக்காக ஆகிவிட முடியாது என்பதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்தும் விதத்தில் கலாநிதி ராகிப் சிர்ஜானி அவர்கள் ஒரு மனிதன் தண்ணீர் குடிப்பதை உணவு உண்பதை எப்படி ஒரு பொழுதுபோக்காக கருத முடியாதோ அதை போன்றுதான் வாசிப்பும் என்று மிக அழகாக அவரது நூலில் குறிப்பிடுகிறார்.

இன்றைய உலகை எடுத்துக் கொள்ளும் போது எம்மில் 37 சத வீதமானவர்கள் எழுதவோ வாசிக்கவோ தெரியாதவர்களாகவே காணப்படுகிறார்கள் என்பதுதான் நிதர்சனம்.

இது மட்டுமல்லாது எமது சமூகத்தில் இன்னும் ஒரு நோய் மிக வேகமாக பரவி வருவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. அதுதான் நன்றாக எழுதும் நன்றாக வாசிக்கும் பலர் இன்று எழுத்தையும் வாசிப்பையும் விட்டு வெகு தூரம் பயணிப்பதையும் சமூக வலைத்தளங்களிலும் கையடக்க தொலைபேசிகளிலும் இன்னொரன்ன நேரங்களை செலவழிப்பதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

வாசிப்பின் முக்கியத்துவம் என்னவென்று நோக்குமிடத்து விடையாக கிடைப் பவைகள்:

1. வாசிப்பதன் மூலம் மொழி விருத்தி அடைகிறது.
2. வாசிப்பதன் ஊடாக சொல் ஆளுமையும் பேச்சு திறனும் அதிகரிக்கிறது.
3. தான் பல்துறைகளிலும் தேர்ச்சி பெற்ற ஒருவராக உருவாக முடியும்.
4. நினைவாற்றல் அதிகரிக்கிறது.
5. புதிய சொற்களின் வளர்ச்சி தம்முள்ளே உருவாகிறது.
6. மன அழுத்தம் குறையும்.
7. கவனச்சிதறல் குறையும்.
8. வலுவான பகுப்பாய்வு சிந்தனை.
9. சிறந்த எழுத்துத் திறன்.

வாசிப்பது எவ்வாறு முக்கியமோ அதே போன்றுதான் வாசிக்கின்ற விடயங்களும் முக்கியமானதாக அமைகிறது. இன்று எம்மில் பலர் நானும் ஒரு வாசிப்பு பிரியன் என்று சொல்லிக்கொண்டு வீணான விடயங்களில் தமது வாசிப்பை செலுத்துவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. உதாரணமாக சினிமா கதைகள், காதல் நாவல்கள், திகில் ஸ்டோரிகள் என்பனவாகும். இவைகள் எமக்கு வாசிப்பின் பிற பலனை தந்தாலும் கூட மறு பகுதியில் அபாயகரமானதாகவே அமைகிறது.

பொதுவாக வாசிப்பவர்கள் இரு பிரதான பிரச்சனைகளை எதிர்கொள்கிறார்கள்.

1. வாசிப்பு பழக்கமின்மையின் காரணத்தினால் வாசிக்கும் போது விரைவாக சலிப்படைந்து சோர்வுற்று வாசிப்பின் மீது விருப்பம் இல்லாதவர்களாக ஆகிவிடுகிறார்கள் இப்படியானவர்கள் தொடர்ந்தும் வாசிக்க முயற்சிகள் எடுப்பது மிக முக்கியமாகும்.

இவர்களின் இந்த நிலை தொடருகின்ற போது சோர்வும் சோம்பேறித்தனமும் அவர்களை ஆட்கொண்டு மொழி மீது உள்ள பற்றுதல் இல்லாமல் ஆக்கி விட முடியும்.

2. நோக்கமின்றி வாசிப்பு. அதாவது உண்மையிலேயே சிலர் பல விடயங்களை தேடி தேடி வாசிப்பதுண்டு. ஆனால் அவர்களின் வாசிப்பில் எந்த விதமான நோக்கங்களும் இருப்பதில்லை. இவர்கள் எதை வாசிக்க வேண்டும் எப்படி வாசிக்க வேண்டும் என்பது பற்றி கற்றுக் கொள்வது அவசியமாகும்.

வாசகப் பெருந்தகைகளே!
வாசிப்பில் விருப்பத்தை ஏற்படுத்த நாம் என்ன செய்ய வேண்டும் என்ற வழிமுறைகளை சற்று நோக்கினால் நன்றாக இருக்கும் என்று நம்புகிறேன்.

1. வாசிப்பதில் நோக்கம் என்ன? நான் ஏன் வாசிக்க வேண்டும்? என்ற கேள்வியை மனதுக்குள் உள்வாங்கிக் கொண்டு அதற்கான விடையையும் மனதில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. வாசிப்பதற்கான ஒரு திட்டமிடலை உருவாக்க வேண்டும்.
3. நேரத்தை வரையறுத்து ஓய்வு நேரங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும். பின்னர் வாசிக்க வேண்டும்.
4. படிமுறை ரீதியான வாசிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.
5. எமக்குத் தேவை என்ற கட்டாய தன்மையுடனான வாசிப்பு.
6. தகவல்களை தொகுத்தல்.
7. வீட்டில் ஒரு நூலகம் அமைத்தல்.
8. வாசித்ததை அதில் தொகுத்ததை பிறரோடு பகிர்ந்து கொள்ளல்.
9. வாசிப்பில் பரஸ்பரம் உதவி செய்தல்.
10. அறிஞர்கள், துறை சார் நிபுணர்கள், அனுபவசாலிகள் போன்றோரிட மிருந்து அறிவை நகர்த்துதல்.

மேற்சொன்ன இந்த பத்து வழிமுறைகளும் வாசிப்பதற்கும் வாசிப்பை தொடர்ச்சியாக மேற் கொள்வதற்கும் இன்னும் வாசிப்பால் பயனடைவதற்கும் நிச்சயமாக உதவும் என்று நம்புகிறேன்.

இப்படி நகர்ந்து செல்லும்போது எமக்குள் ஒரு கேள்வி எழ வேண்டும் எவற்றை நாம் வாசிப்பது? என்று.

முதலில் வாசிப்பேன் என்று உறுதி எடுத்தவன் வாசிப்பின் இலக்கு ஒன்றை தயார்படுத்தியவன் பின்னர் உறுதியுடன் உத்வேகத்துடன் எவற்றை வாசிப்பது என்ற வினாவிற்கான விடையை அவன் தேட வேண்டும் எதனை வாசிக்கலாமென.

எதனை வாசிக்க வேண்டும் என்பதற்கு விடையாக.

1. பொதுவாக எமது வாசிப்போ துறைகள் சார்ந்த வாசிப்பாக இருப்பது மிக முக்கியமானது.

வைத்தியன் அவன் துறை சார்ந்த வாசிப்புக்களையும் பொறியியலாளர் அவரது துறையில் உள்ள புத்தகங்களையும் இரசாயணவியலாளர் இரசாயணவியல் பற்றிய வாசிப்பையும் இப்படியாக தத்தமது துறைகளுக்கு ஏற்றவாறு வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.

2. வரலாறுகளுடன் தொடர்புடையதாக எமது வாசிப்பு இருக்க வேண்டும்.

அதாவது வரலாற்றுத் துறை என்பது மிக முக்கியமானதொரு துறையாகும். இது மதங்களுக்கு சமூகத்திற்கு அவர்களின் தன்மைகளுக்கு ஏற்றவாறு வேறுபட்டு காணப்படும். அந்த வரலாற்றை கற்பது கடந்த காலத்தை எங்களால் நன்கு விளங்கிக் கொள்ள ஓர் உந்து சக்தியாக அமைகிறது.

அதுமட்டுமல்லாது எம்மை விட்டு கடந்து சென்ற வரலாறுகளை படித்து எமது நிகழ்காலத்தை சீர்படுத்தவும் அதனுடான அறிவை மேம்படுத்தி சமூகத்தில் நல்ல பெறுபேறுகளை பெறவும் முடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

3. சமகாலத்தை வாசிக்க வேண்டும்.

இது ஆபத்தானதும் மிக முக்கிய மானதுமாகும். எம்மை பொறுத்த வரையில் இது கட்டாயமானது ஒன்றாக கருதப்படுகிறது. நாம் வாழும் சமகால உலகத்தை அதன் அரசியலை பொருளாதார பிரச்சினைகளை அறிவியல் நிலைமைகளை தாய் நாட்டு சூழலை உலக மக்களின் நிலவரங்களை அறிந்திருக்கும் ஒரு படிமுறையாகும்.

இப்படியான வாசிப்பு எம்மிடையே எமக்கு தெரியாத பல விடயங்களில் எங்களை ஒரு சாதனையாளனாக உருவாக்க வழிவகுக்கிறது.

4. பிறரின் கருத்துக்களை வாசிக்க வேண்டும்.

நாம் அனைவரும் மிகக் குறைவு காட்டுகின்ற ஒரு பகுதியாக இதை கருதலாம். ஏனெனில் எம்மில் பலர் மற்றவர்களின் கருத்துக்களுக்கு செவி சாய்ப்பது கிடையாது. தான் சொல்லுகின்ற விடயங்கள் தான் சரி என்ற பாங்கோடு வாழ்கிறோம். அவ்வாறின்றி இன மத கலாச்சாரங்கள் கடந்து அனைத்து அறிஞர்களினதும் மத போதகர்களினதும் கருத்துக்களை உள்வாங்கியதாக எமது வாசிப்பு மிக முக்கியமாக அமைந்திருக்க வேண்டும்

5. தங்களின் மதப் புத்தகங்களை வாசிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பின்பற்றுகின்ற மதத்தை சரியாக விளங்கிக் கொள்ள முற்படுகின்றவர் மதம் சார்ந்த விடயங்களில் கூடுதல் கவனத்தை செலுத்த மதம் சார்ந்த புத்தகங்களை வாசிப்பது நன்று.

6. மத போதகர்களின் போதனைகளை வாசித்தல்.

இறைவனின் கட்டளைகளை எடுத்தியம்புகின்ற மத போதகர்கள் அது கட்டளைகள் மிக முக்கியமான பகுதி இவைகளை வாசிப்பதும் அதன் வழியில் நடப்பதும் மிக முக்கியமாகும்.

பொதுவாக பலர் தங்களது சமயம் சார்ந்த விடயங்களோடு மட்டும் தமது வாசிப்பை முடித்துக்கொள்கிறார்கள். அவ்வாறு இன்றி அனைத்து சமயங்களையும் அதன் நெறிமுறைகளையும் வாசிக்க வேண்டும். அப்போதுதான் நாமும் கருத்துக்களையும் விழுமியங்களையும் அறிய முடியும். அது மட்டுமல்லாது தாங்கள் பயணிக்கின்ற துறைகளில் ஊடான வாசிப்பும் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

7. தங்களது மதங்களில் உள்ள கிளறி விடப்படும் சந்தேகங்களை படித்தல்.

இன்று உலகில் பரவி இருக்கும் மிகப் படுமோசமான நோய்களில் ஒன்று மதங்கள் பற்றிய புதுப்புது தகவல்களையும் இல்லாத கட்டுக் கதைகளையும் பரப்புவது. அது தொடர்பான அறிவைப் பெறுவதாயின் அது சார்ந்த நூல்களையும் அது சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளையும் படிப்பது கட்டாயமாகும்.

8. குழந்தை உலகம் பற்றிய வாசிப்பு.

இது மிக வேண்டப்படும் பகுதி. சிலருக்கு ஆச்சரியமானதாகவும் இருக்கலாம். குழந்தை வளர்ப்பது பற்றியும் குழந்தைகளை கண்காணிப்பது பற்றியும் குழந்தைகளின் மனநலன்கள் பற்றியும் அவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் எமது வாசிப்பில் உள்ளடக்கிக் கொள்வது மிகப் பொருத்தமானதாக இருக்கும். அது மட்டுமல்லாது சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், சிறுவர் கட்டுரைகள் என்று பல பகுதிகளிலும் எங்களின் கவனம் திசை திருப்பப்பட வேண்டும். அப்போதுதான் ஆளுமை உள்ள ஒரு சமூகத்தை எங்களால் கட்டி எழுப்ப முடியும்.

9. ஊக்கத்துடன் தொடர்புடைய வாசிப்பு.

இவைகள் தாண்டி இன்னும் பல இருப்பினும் எமது வாசிப்புகள் ஊக்கப்படுத்தும் வாசிப்பாக இருப்பது மிகத் தேவையானதாகும்.

அதற்காக நம் எண்ணங்களும் உடலும் சோர்வடைகின்ற போது கவிதை, பாடல்கள் இன்னும் உற்சாகம் தரக்கூடிய வாசிப்புகளில் எமது கவனத்தை செலுத்துவது மேற்கொண்ட வாசிப்புகளில் நாங்கள் உச்சம் தொட உந்து சக்தியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஆகவேதான் அன்பான வாசகர்களே,

வாசிப்பை நேசிப்பவர்களாகவும் வாசிப்போடு எங்கள் வாழ்க்கை முறையை பின்னிப் பிணைந்தவர்களாகவும் நாம் ஒவ்வொருவரும் மாறி உலகை ஆள வரும் அடுத்த தலைமுறையிடம் இந்த உலகை ஒப்படைக்க வேண்டும். அது மட்டுமல்லாது உலகை ஆள வரும் அடுத்த தலைமுறையை நிரந்தரமாக வாசிப்பின் மீது ஊக்கமுடையவர்களாகவும் தேடல் உள்ளவர்களாகவும் வளர்த்தெடுக்க வேண்டும்.

இந்த வாசிப்பு பழக்கத்தை எம்மிடையே எமது பிள்ளைகளிடையே ஏற்படுத்த வீடுகளில் நூலகம் அமைத்து வீடுகளில் கற்றல் கற்பித்தலுக்கான களங்களை அமைத்து சிறுபராயத்திலிருந்து புத்தகங்கள் மீதான அதீத மரியாதையை பிள்ளைகள் மனதில் விதைத்து சிறந்த நல்லொழுக்கம் உள்ள சமுதாயத்தை கட்டி எழுப்பவும், புத்தகங்கள் மீது காதல் கொண்ட பிள்ளைகளை உருவாக்கவும் எமக்குள் நாம் திடம்புகுவோம் என்றும் நாமும் வாசிப்புப் பிரியர்களாகுவோம் என்றும் சொல்லி நிறைவு செய்கிறேன்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்பதித்த மூத்த கவிஞர்கள்:

## கொள்ளி சொருகுவதேன்?

- கவிஞர் மருதமுனை ஹஸன்.

வெள்ளை மலரணைப் பள்ளி யிலுன்னுடல்
அள்ளி யணைத்ததை என்ன வென்பேன்
துள்ளி வரும்மன எண்ண வலைகளை
நள்ளி ரவில்தினம் நாடு கிறேன்

கொள்ளை யழகையும் கொஞ்சும் மொழியையும்
தள்ளி யிருப்பது என்ன அன்பே
புள்ளி மயிலுனைக் கண்டு கதைத்ததை
வெள்ளி நிலவினில் எண்ணு கின்றேன்

கிள்ளிச் சுருட்டுமிவ் வாடைக் குளிரிலும்
கிள்ளையுன் ஞாபகம் கன்ன லென்பேன்
தள்ளி இருந்துநீ தட்டழியும் என்னை
எள்ளி நகைப்பதை என்ன வென்பேன்

தெள்ளு தமிழினில் வண்ண மிசைப்பவன்
மெள்ளக் கதைப்பது என்ன வென்பாய்
கள்ள மிலாமனக் கன்னி அழகனைக்
கொள்ளி சொருகியேன்? கொல்லு கின்றாய்.

.......................................

**கவிஞர் மருதமுனை ஹஸன் அவர்களின் இரு வெண்பாக்கள்:**

ஆதம் உனைக்கண்டு அன்று மயங்கிநின்ற
சீத மதிமுகச் செங்கொடியாள் - வேதனையில்
இன்றும் நினைந்துன்னை ஏங்கிக் கலங்குகிறாள்
சென்றவளைப் பார்ப்போம்வா சேர்ந்து.

நின்று கதைக்கவும் நேரமில்லை யென்றுடனே
சென்று மறையாதே சின்னவனே - மன்றமலர்த்
தென்றல் தனிலேறித் தெம்மாங்கு பாடுமவள்
பொன்னுலகம் போவோம் பொறுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சரி கவிதைகள்.

## மௌன திராட்சை ரசம்.

உனக்கு ஞாபகம்
இருக்கப் போவதில்லை
திசுக்களின் அணுக்கள் தோறும்
ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும்
தேனிக்களாய் உன் நினைவுகள்...
தேன்வதையிலே
துளித்துளியாய் சேமித்த
ஓராயிரம் ஞாபகத் தேன்துளிகள்...
கணங்கள் எல்லாம்
கருமிபோல சேமித்து
கண்கள் போல
பொத்திப்பொத்திக் காத்து
உன் ஒவ்வொரு அசைவிற்கும்
உணர்வின் இடுக்குகளில்
ஆலாபனை நெய்து
வானம் தாண்டிப்பாய்ந்து
அங்கும் உன்னையே சேர்ந்து
மேகத்துணுக்குகளில் இழைந்து...
மழையெனவே பொங்கி...
ஒன்றுமே எனக்கு
மறக்கப்போவதில்லை

மூளை இழையங்களில்
ஒன்றித்துக்
கருக்கொண்ட நினைவுகள்
மௌனங்களெனும்
திராட்சைக் கனிகளாக
இன்னும் பல்கிப் பெருகிக்
கொண்டே...
வாழ்வில் ஏதோ ஒன்று
எனக்குள் உன்னை
ஞாபகப்படுத்த
ஊற்றாய்க் கிளம்பிக்
காற்றாய்க் காதோரம்
கிசுகிசுக்க...
ஒவ்வொரு ஞாபகப்படுத்தலிலும்
கண்மூடிக் கிறங்கி
கிறுக்கி
மனதோரம்
இசைந்து இசைத்துக்
கசிந்து வடியும்
மௌன திராட்சை ரசம்
என்னுள்ளே
அதுவே கருக்கலைப்பாகிக்
குருதிச்சிவப்பாகும்

ஆதிப்புழலில் உள்நுழைந்த
நுண்ணிய எண்ணமாய்
நூலாகிப் பின்
போர்த்தும் ஆடையானேன்
பூவாகி உன்
தோள்களிலே மாலையானேன்
நிசப்தமான நடுநிசியில்
முடிவிலி நேசம் தைக்கும்
தனிமையில் உலகை
வியாபித்த இருளாய்...
பிரபஞ்சம் துரத்தும்
பகலும் இரவுமாய்
நான் இருப்பேன்
நீ அறிய வாய்ப்பில்லை
அன்பே
இப்போதும் எப்போதும்
மௌன திராட்சை ரசம்
வழிந்து கொண்டே...
●●●

- Dr. **ஜலீலா முஸம்மில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பின் செய்தி...

ஒரு
இறப்பின் செய்தி
என்னை இப்போதெல்லாம்
கண் கலங்க வைப்பதில்லை
துக்கப்படச் செய்வதில்லை
ஐயோ பாவமென
சொல்ல வைப்பதில்லை
பாதி தூக்கத்தில்
என்னை பதறியெழச்
செய்திடுவதில்லை
மரணச் செய்தி சொல்லும்
தொலைபேசி அழைப்புக்களால்
நான் திடுக்கிடுவதில்லை

எனக்கு வருத்தம் தரும்
செய்தியென்பது இன்னும் நான்
உயிரோடிருக்கிறேனே
என்பதுதான்

ஆதலால்
இறந்தவனுக்காக மகிழ்கிறேன்
அவனுக்காக பிரார்த்திக்கிறேன்

இறந்தவனே
நீ அமைதியடைந்திருக்கிறாய்

இறந்தவனே
நீ விடுதலை அடைந்திருக்கிறாய்

இறந்தவனே
இவ்வாழ்வு உனக்கு விதித்த
விதிகளிலிருந்து
வெளியேற்றப்பட்டிருக்கிறாய்

இறந்தவனே
நீ இப்போது உன் கடமைகளுக்காக
செருப்பாய்த்தேயத் தேவையில்லை

இறந்தவனே
இனி நீ இந்த மனிதர்களுக்காக
மூச்சு விடத் தேவையில்லை

இறந்தவனே
இனி நீ இந்த மனிதர்களிடம்
எதற்காகவும் பணிந்து
போகத்தேவையில்லை

இறந்தவனே
இனி நீ இந்த மனிதர்களுடன்
ஒரு வித அச்சத்துடனே
வாழத்தேவையில்லை

இறந்தவனே
இனி நீ ஆறாக்காயங்களை
திறந்து திறந்து பார்த்து மூடிக்
கொண்டிருக்கத் தேவையில்லை

இறந்தவனே
உனக்கு இனி
இந்த மனிதர்கள் சாபமிடமாட்டார்கள்

இறந்தவனே
உனக்கு இனி இந்த மனிதர்கள்
துரோகமிழைக்கமாட்டார்கள்

இறந்தவனே
உன்னை இனி இந்த மனிதர்கள்
எந்த தேவைக்காகவும்
தேடப் போவதில்லையென்பதைத்
தவிர

உனக்கு இந்த
மரணம் நல்லதே செய்திருக்கிறது
உண்மையிலேயே மரணம்
ஒரு நல்ல செய்தியேதான்

உன் ஆன்மா
அதன் கூடடைந்திருக்கிறது

எனக்கு
இப்போது
வருத்தம் தரும் செய்தி
எதுவென்றால்

நான் இன்னும்
உயிரோடிருக்கிறேனே
என்பதுதான்!
●●●

**- மயிலிறகு மனசு**
**ஷிபானா அஸீம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்.

வாழ்த்தத்தகு அடைவை நீ..
வந்தடைய
வழித்துணை வேண்டுமா..?
வாயிலிருந்து சொல் விதை
நல்ல சொல்லுடன் தொடங்கு
நல்ல சொல்லுக்குள் அடங்கு
வாசலுக்கு வா இறையிடம்
இயற்கையை கேட்டு இரஞ்சு
வாழ்த்து இன்னும் நன்மைகள் கேள்

நிழலில் நின்று மரத்தை நேசி
சிறிதேனும் யோசி
மரம் ஒரு சொல் எத்தகு பலன்
இலைகளை ஆராய்ந்து குறி
பயன் என்பதன் பதம் அறி
சொல் தீர்ந்துபோவதில்லை
ஒவ்வொரு சொல்லாக
உதிர்த்துக் கொண்டிருக்கும்
மரங்களிடம் இன்னும்
மீதமிருக்கின்றன சொற்கள்.

வேர் இன்னும் ஆழமாக ஊன்ற
மண்ணின் கனிவு
ஊறிக்கொண்டிருக்கும்
நிலத்தில் உலராமல்
ஈரமாக இருக்கின்றன சொற்கள்
நல்ல சொல்லுடன் வாழ்ந்து பார்
சொற்கள் மாத்திரை
சுகத்தை அள்ளி வைக்கும்
நோயை தள்ளி வைக்கும்
சொற்கள் யாத்திரை
பயணம் எளிதாகும்
கவனம் வலுவாகும்
ஆழியில் அடர்வனத்தில்
மண் மேட்டில் மலை முகட்டில்
நிலவுக்கு பக்கத்திலும்
நீ இருப்பாய்
சூரியனுக்கு அருகில் சென்று
சுகம் விசாரிக்கலாம்
சொற்கள் உன்னை
உலகத் தரத்திற்கு உயர்த்தி விடும்
சொல் வாக்கு
காப்பாத்து அல்லது பின்பற்று
பயணத்தையும் கவனத்தையும்
நல்ல சொல்லுடன் தொடங்கு
சொல் தரும் ஊக்கம்
சொல் ஒரு மார்க்கம்!
●●●

- ரோஷான் ஏ. ஜிப்ரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை நீர்.

விழுந்து நிலம் தோண்டும்
மழைநீருடன் சேர்ந்த காற்று
தூவானமாய் ஒரு பாடலை
பாடிவிட்டு போகிறது.

யாருக்கான பாடல் என்று
தெரியாமல்
அதை எழுதிவிட
முனைகிறேன்.

இடையிடையே நுளம்புகளின்
தொந்தரவால்
திசைமாறும் பாடல்
இறுதியில் எனக்கானதாக
மாறிவிடுகிறது.

நேற்றைய மழையிலும்
இன்றைய மழையிலும்
நனைந்து காயும்
கூரை சொல்கிறது
நிலம் மட்டும்தானே மழையை
கொண்டாடிக் கழிக்கிறது.

●●●

**- காரையன் கதன்.**

# தொடர் பயணம்.

பறந்த உலகை மறந்து
போகிறேன்
சில மனிதங்களின்
முன்னால் மறைந்து போகிறேன்

காற்றின் எதிர் திசை
கலைத்து விடாத
கொஞ்ச கனவுகளை
நெஞ்சில் சுமந்து போகிறேன்

விழிப்பார்வையில்
படாமல்
மழைச்சாரலில்
நடந்து போகிறேன்

கொஞ்ச தூரம்
நெஞ்சின் ஓரம்
தூங்கி எழும்

உன் அன்பின் வார்த்தையில்
கண்ணீரினை துடைத்துச்
செல்கிறேன்

எதுவரையில்,
இதுவரையில் தெரியாமல்
மறுபடியும் மறுபடியும்
இந்தப் பாதையில்
மட்டுமே
பயணமாகிறேன்!

●●●

**- ஏ. எம். கஸ்புள்ளா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் நதி.

நான் கடுமையாகத் தூங்கிக்கொண்டிருக்கின்றேன்.
நித்ரா தேவி மிக அலாதியாக
என்னோடு தூங்குகிறாள்.
எனது உணர்வு
பாரமேற்றி வைக்கப்பட்டிருக்கிறது.
நதிபோல் அமைதியாகப்
பாய்ந்து கொண்டிருக்கிறது
எனது மூச்சுக்காற்று.

சரி இப்போதுதான்
பெரும் ஆபத்து நிகழப்போகிறது.
நீங்களும் இது போன்ற
ஆபத்துக்களில் மாட்டப்பட்டிருக்கலாம்.
இரவு 12 மணி.
இறுகப் பூட்டப்பட்டிருக்கின்றன கதவுகள்.
சிறு துளையூடாகவும் கடக்க இயலாது குளிர்ந்த காற்றுக்கு.
நான் தற்போது உறங்கும்
ஒரு ஜன்னலின் கடைச்சல் வழியாக
சிறு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது வெளிக் காற்றுக்கு.

இப்போது ஒரு கனவு காண்கிறேன்
ஒரு நதி
அது வானத்தில் பாய்கிறது
அதில் குளிக்கும் எண்ணம்
முதலில் காலை விடுகிறேன்
இப்போது தாழ்கிறேன்
நீச்சலடிக்கிறேன்.
கூட்டம் கூட்டமாக
அந்த நதியைத் தடவிச் செல்கின்றன மேகங்கள்.
நான் இழுத்துச் செல்லப்படும்போது
திடீரென விழிக்கின்றேன்.

காற்றுக்கு அனுமதி வழங்கிய
கடைச்சல் வழியாக
நீர் பாய்ச்சப்பட்டிருக்கிறது.
கடுமையான மழையின் தூவானம்
பெரும் நதியாக உருக்கொண்டு
எனது படுக்கையை ஈரப்படுத்தியிருக்கிறது
நித்ரா தேவி
என்னைவிட்டும் நகர்ந்து போனாள்.

●●●

- டீன் கபூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● எழுகவி ஜலீல்.

## என்னருகில் நீயிருந்தால்!

அந்த
ஆட்டுக் குட்டியாகவாவது
நான் இருந்திருக்கலாம் என்றெல்லாம்
மனம் அவாவுகிறது!

நீயோர்
ஓலைக் குடிசையில் வசித்திருந்தாலும்
ஒழுகாமல் உள்ளங்கையில்
தாங்கியிருப்பேனெனவும்

இரவுகளை
விடிய முடியாதபடி
அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில்
அரை இருளும் உன் முக ஒளியும்
பனிக்காற்றுமாய்
ஆனந்தக் களிப்புடன்
சாக்குக் கட்டிலில் சாய்ந்தபடி
மலர்ந்த மனசோடு நான்
ஒரு பாடல் எழுதியிருக்க

அதன் பிறகு பெய்த
மழைத்துளிகள்
மல்லிகைப் பந்தலில் சயனித்திருந்து
விட்டு விட்டு வீசிய இளங்காற்றுக்கு
துளித் துளியாய்
விழுந்த இராகத்தோடும்

என்றோ ஒருநாள்
இறப்பில்
மறைத்து வைத்திருந்த
புல்லாங்குழலில்
இதற்கென்றொரு ராகம்
இசைத்துமாய்....
இவற்றோடு என் ஓ(ஆ)சைகளை
நிறுத்தியுமிருக்கலாம்தான்
என்னருகில் நீயிருந்திருந்தால்.

●●●

**- எழுகவி ஜலீல்.**

●● எல். வஸீம் அக்ரம்.

## உடைந்த நம்பிக்கை.

கனவை எழுதிக் கொள்ளும்
இரவுப் பெருவெளியில்
மனதில் எழும் ஜீவநதி

காட்சிப்படுத்த முடியாத
கவிதைச் சொற்களின் ரசம்
தேகமெங்கும் நழுவிச் செல்லும்

தூர்ந்துபோன மௌனத்தின்
ஆயிரம் கதைகளின் கிறுக்கள் நாதம்

வாழ்வின் பிந்திய வாக்கியங்களில்
கபடங்களின் காகித ஓடம்
காலத்தின் தீராத ஓலம்

நேரத்தின் வார்ப்பில்
கனிவின் உலர்ந்த ஊற்றுக்கண்
ஓர்மத்தின் இறுதி அத்தியாயம்

மோட்சத்தின் தோரணைகளில்
மகிழ்ச்சி மின்னும்
பின்
மரணத்தின் ஒளியில்
நம்பிக்கையின் நிழல் நிமிரும்

அது அகாலத்தில் மீள உடையும்.

●●●

**- எல். வஸீம் அக்ரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மொழியே!

தமிழே அமுதே தரணியின் தாயே
அமிழ்தம் பொழியும் அன்னையும் நீயே
வீரம் நிறைந்த விடியலின் வடிவே
உரமாய் வந்தாய் உணர்வில் நீயே
புனிதம் நிறைந்த பூமகள் உனையே
கனிவாய் வணங்கி காப்பேன் தாயே

மண்ணில் என்றும் மகிமை நீயே
விண்ணே வியக்கும் விடியலின் தாயே
உன்னை வணங்கினேன் உவகையில் நானே
அன்பாய் காப்பாய் அன்னை நீயே
அகரம் சொல்லி அணைத்திடும் அழகே
புகழ்ந்தே நின்றேன் புவியில் உன்னையே

காப்பியம் சொல்லிடும் காவியம் நீயே
மூப்பாய் உதித்த முதன்மையும் நீயே
கம்பன் பாடிய கவியின் அழகே
வம்சம் காத்த வள்ளலும் நீயே
அன்பை வரியில் அழகாய் ஊட்டும்
என்றன் தாயே எழிலும் நீயே

சங்கம் அமைத்தே சங்கை முழங்கி
மங்கா புகழை மகுடமாய் சூடி
விண்ணும் புகழும் விந்தை செய்து
மண்ணை ஆளும் மகத்துவம் நீயே
உன்றன் புகழை உலகம் பாட
என்றன் வாழ்வின் ஏற்றம் கண்டேன்

பண்டித ராசர் படைத்தே தந்த
பண்பான நூல்களை பாரில் கொண்டு
வித்தாய் விளங்கும் விந்தை மொழி
நித்தம் வாழ்வில் நிறைந்த எங்கள்
அன்பு கொண்ட அன்னை மொழி
என்றும் நீயே எங்கள் மொழி

அகத்தையும் புறத்தையும் அவனியில் வாழ்வாய்
அகத்தினில் ஏற்றே அன்பாய் வாழ
அழகாய் வகுத்த அன்னை மொழி
அழகிய பண்பாடு அருளிய மொழி
எங்கள் மொழி எழிலின் மொழி
சங்கை முழங்கும் சாதனை மொழி

உலக மொழி உன்னத மொழி
கலக்கம் இல்லா கன்னி மொழி
மானம் காக்கும் மகிமை மொழி
சினத்தை அடக்கும் சிந்தனை மொழி
கர்வம் நிறைந்த காதல் மொழி
சர்வம் போற்றும் சரித்திர மொழி

எங்கள் மொழி எழிலின் மொழி
அங்கம் நிறைந்த அன்னை மொழி
என்னை ஆளும் என்றன் மொழி
அன்பை தரும் அன்னை மொழி
உன்னை நானே உயிராய்க் காப்பேன்
உன்றன் பிள்ளை உருவாய் நானும்.
●●●

**- பாரதி மைந்தன்.**
**(அ. கிளைம்செனன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றிய நதியின் கரையில் சில பூக்கள்.

நைந்து போன கடிதத்தை
வாசிக்க... வாசிக்க...

தோற்ற காதல்
வாசனை தேடிப் போன
மனதில் எச்சில்சொட்ட
பசித்த ஓநாய்
சிறகு உலர்த்துகிற
பறவையிடமிருந்து
தூறல் மழை
சிற்பியின் மனதில்
உதித்த உருவல்ல
பாறையுள்ளிருந்து சிலை
புகழ்வான்
பாராட்டுவான்
புதைகுழி பற்றி கவனம் கொள்ளுங்கள்

அடித்தால் அடியுங்கள்
உதைத்தால் உதையுங்கள்
அன்பாயிருப்பது ஏமாறுவதல்ல.
ராமன் ஆண்டாலென்ன?
ராவணன் ஆண்டாலென்ன?
அன்னாடங் காச்சிகள்
ஈயாதான் பறக்கணும்.

மனசுக்குள் புழுங்காதீர்கள்
நெருக்கமானவர்களிடம் பகிர்ந்திடுங்கள்
பலூன் ஊத ஊத வெடிக்கும்

உண்மையைக் காப்பாற்ற பொய்
சொல்லலாம்
பொய்யைக் காப்பாற்ற
உண்மை சொல்லாதே
காக்க காக்க நீதி காக்க

நவதானியங்கள் தின்றவர்கள்
சுகமாய் வாழ்ந்தார்கள்
கோதுமை தின்பவர்கள்
நோயோடு அல்லாடுகிறார்கள்

நளபாகம் நாலாவிதமாகிப் போச்சு
கோடாரியை கீழே போடு
காடுகள் கோபத்தில் இருக்கின்றன
சிதைக்குள் சிக்கிக் கொள்ளபோகிறாய்
வயிற்றில் கக்கூஸோடு அலைகிறீர்கள்

மூளையை கக்கூஸாக்கி
வெறிக்கூத்தாடுகிறீர்கள்
கக்கூஸ் என்றதும் ஏன் பதறுகிறீர்கள்?

வலியிருந்து வெளியேறுகிறேன்
வேதனையை கழற்றி எறிகிறேன்
ஆசுவாசமாக இருக்கிறது.

ஒடுக்கப்படுபவர்களுக்காக
குரலெழுப்புவேன்
அடக்கப்படுபவர்களுக்காக
கரம் நீட்டுவேன்
நான் உயிருள்ள மனிதன்
ஒடுக்குகிறார்கள்
உயிராய் நேசிக்கிறீர்கள்
போதும் பெண்ணினமே
பூவுக்குள் தேன்
முள்ளுக்குள் பூ

தேன் மட்டும் குடிக்கின்றன
வண்டுகள்.

•••

**- வசந்த தீபன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜகவியின் பாடல்.

**பல்லவி –**

யாரஹ்மானே யாரஹ்மானே
அறிவியல் தீன் மறை தந்தோனே
யாரஹ்மானே யாரஹ்மானே
அழகியல் வாழ்வினைத் தந்தோனே //

உன்னை நினைக்கும் நெஞ்சம் சுவனம் செல்லுமே
உன்னை அழைக்கும் இதயம் உதயம் வெல்லுமே
உன்னை நினைக்கும் நெஞ்சம் சுவனம் செல்லுமே
உன்னை அழைக்கும் இதயம் உதயம் வெல்லுமே

யாரஹ்மானே யாரஹ்மானே
அறிவியல் தீன் மறை தந்தோனே
யாரஹ்மானே யாரஹ்மானே
அழகியல் வாழ்வினைத் தந்தோனே

**சரணம் – 1**

என்றும் மரணமில்லாதவன்
நீ மட்டுந்தான் இறைவா இறைவா
நீ மட்டுந்தான் இறைவா இறைவா
உன்னையே வணங்கித் தொழுது
உன்னிடமே உதவி தேடுகிறேன் இறைவா இறைவா
உன்னிடமே உதவி தேடுகிறேன் இறைவா இறைவா

சத்தியமாய் எங்கும் அழியும்
நிலையான உயிரோடு வாழ்பவன்
நீ மட்டுந்தான் இறைவா இறைவா
நீ மட்டுந்தான் இறைவா இறைவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ படைத்த வானம் பூமி யாவும்
உனக்கே சொந்தம் இறைவா இறைவா //

யாரஹ்மானே யாரஹ்மானே
அறிவியல் தீன் மறை தந்தோனே
யாரஹ்மானே யாரஹ்மானே
அழகியல் வாழ்வினைத் தந்தோனே

**சரணம் – 2**

என்றும் உறக்கமில்லாதவன்
நீ மட்டுந்தான் இறைவா இறைவா
நீ மட்டுந்தான் இறைவா இறைவா
உன்னையே நினைந்து அழுது
உள்ளம் உருகிப் பாடுகிறேன் இறைவா இறைவா
உள்ளம் உருகிப் பாடுகிறேன் இறைவா இறைவா

நிச்சயமாய் என்றும் ஒளிரும்
நிலையான புகழோடு ஆள்பவன்
நீ மட்டுந்தான் இறைவா இறைவா
நீ மட்டுந்தான் இறைவா இறைவா

நீ கொடுத்த நேரம் காலம் யாவும்
உனக்கே சொந்தம் இறைவா இறைவா //

யாரஹ்மானே யாரஹ்மானே
அறிவியல் தீன் மறை தந்தோனே
யாரஹ்மானே யாரஹ்மானே
அழகியல் வாழ்வினைத் தந்தோனே.
●●●

**- ராஜகவி ராகில்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தியொன்றே!

**வா**ன் வெளியில் சூரியன் கண்டான் ஆதிவாசி,
அவன் அதை நினைத்தான் கடவுளென்று.
தேன் நிலவு ஒளி கண்டான்,
மனந்திகைத்து அதையுந்தான் கடவுளென்றான்.
நான்கு திசை விரை வால்வெள்ளி கண்டு,
நானிலத்தில் நமக்குமிது கடவுளென்றான்!

தோன்றுகின்ற புயல், மழை, நெருப்பு,
நதியனைத்தும் கடவுளென்ற காலம் மாறி,
இயல்புகளின் மாறல் கண்டு,
வியப்புமிகு விஞ்ஞானத்தால்
வீணான நம்பிக்கை விட்டொழித்தான் மனிதனின்று!

புதிர்போடும் புதுமைகள் கடவுளில்லை!
எமை ஏப்பமிடும் நிலமுந்தான் கடவுளில்லை!
நிலந்தன்னில் நிகழ்விளைவும் கடவுளில்லை!
இவையெல்லாம் நமக்குணர்த்தும் விஞ்ஞானம்
பிரபஞ்சமதை இயக்குவது சக்தியென்றும்,
அதுவொன்றே இறைவனென்றியம்புகின்றதே!

●●●

- **செம்மைத்துளியான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிவு!

மடங்காய் வார்த்தைகள்
கோர்க்கலாம் - பல
மேடையேறி பேசலாம்

பலனில்லை நீயோ
துணிவில்லை

மங்கை நீயே
மதில் உனக்கு நீயே

மாதுவே
மதுவல்ல நீ
மடை திறக்க வெள்ளம் நீ

மிதி நீயும் துணிந்து
உனக்கு எதிரை

மிகை அங்கே எதுவுமில்லை
உனக்கு இணையே

முன்னேர
முள்ளும் வரும்
முளையிலே கிள்ளி எறி

மழையென அளி - இல்லை
மாரியென பொழி

மயங்கிடாதே
மாதாவே நீயே

முற்றுகையிட எதுவுமில்லை
முடிவில்லை
உலகிங்கு உருண்டையடி

முடிவு கொடு
முடிச்சிடாதே

மூடிக்கொள்ள
எட்டி உதை

மனமிங்கே
மலை - அது மென்னில்லை
உறங்கும் எரிமலை

உயிர்த்தெழு பூமியும் தரும்
பிளந்து உனக்காய் இடம்

எட்டி வை ஒரு அடி
தள்ளியே நிற்கும் பத்து படி

கொஞ்சம் இதை
செய்து பாரடி
பாரும் உன் கைப்பிடி...

நமக்காய் நாமே அன்றி
இல்லை எவரும்...

துணி உனக்கு போர்வை
துணிவே உனக்கு ஆடை

உணர்ந்து கொள்...
உனக்கு நீயே
உறுதுணை.
●●●

- இமையி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● மாஹிரா ஹமீட் அஸ்ஹர்.
கம்பளை.

# வண்ணமற்ற வாழ்க்கை.

நயவஞ்சகர்கள் நடமாடும் நாசகார உலகிது
நல்லவன் வேடமிட்டு நடிப்பவர்கள் அதிகம்
பேச்சிலும் மூச்சிலும் பாசாங்கு செய்கிறார்கள்

கொடுக்கல் வாங்கலிலும் நிறையவே கலப்படம்
நம்பிக்கை நாணயம் செயலிழந்து போகிறது
உண்மையும் நேர்மையும் ஆழ்ந்த உறக்கத்தில்

படைத்தவன் பார்வைக்கும் அஞ்சாதோர் பலர்
பொய்யில் புரண்டு புரட்டோடு அலைகிறார்கள்
பணத்துக்காக உயரிய பண்புகளுமே பணயம்

உற்றார் உறவினர்களை உதறித் தள்ளுகிறார்கள்
பெற்றோரை ஏறெடுத்துப் பாராதோரும் உளர்
பாரினில் எரிகிறது பலரது வாழ்வு

நிம்மதியும் மகிழ்ச்சியும் நிர்க்கதி நிலையில்
மனிதன் மட்டுமே வரமாய்ப் பெற்ற
ஆறறிவு கொண்டு பயணித்திடல் நன்று.
●●●

- மாஹிரா ஹமீட் அஸ்ஹர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியற்ற நிழல்!

கவள சோற்றுக்கும்
கையளவு துணிக்கும்
கனவு காணும் வாழ்க்கை
வறுமையே வாடிக்கை

ஒக்கார நேரமில்லா
பொழுதுகள்
ஒழைக்கவும் திராணியில்லா
ஓஞ்ச உடம்பு...

ஒழைச்சாத்தான்
கா வயிறு நனையும்
நிலையில்
வறண்ட வாழ்க்கையும்
ஈரபதமில்லா
சுருங்கிய மேனியும்

மாசிதட்டிய
விழிகளுக்குள்ளும்
தூரத்துகனவாய்
துரத்துகிறதே
நம்பிக்கை மின்னல்கள்...

இருட்டான வாழ்க்கையில்
ஒளியற்ற நிழலாய் ஏழை!!

●●●

- கமலாதேவி தனபாலன்.



# கானல் நீர்.

விளக்கு எரிகின்றது - அதில்
வெளிச்சம் வருகின்றது
வண்டு விரைகிறது - ஏனோ
வாழ்வை முடிக்கின்றது

கரும்பு இனிக்கின்றது - அதன்
கழிம்பும் சுவைக்கின்றது
கள்ளில் மிதக்கின்றது - உடல்
காய்ந்து மடிகின்றது

வரவு மிகைக்கின்றது - நிதம்
வாழ்ந்து மகிழ்கின்றது
வாழ்வே உழைக்கின்றது - வீணில்
வீழ்ந்து மடிகின்றது

ஆசை கனக்கின்றது - மனம்
ஆட்டிப் படைக்கின்றது
ஓட்டம் தொடர்கின்றது - மெய்
ஓய்ந்து ஓடிகின்றது

அறிந்தே நடக்கின்றது - யாவும்
அறியாமை மிகைக்கின்றது
புரியாமை புரிகின்றது - மிதி
தெரியாமை நிலைக்கின்றது

வேடங்கள் மிகைக்கின்றது - கலை
பாடங்கள் நடக்கின்றது
வேஷங்கள் கலைகின்றது - பலர்
வேதாந்தம் புதைகின்றது

மனம்தானே நினைக்கின்றது - வாழ்வு
மண்ணில் நிலைக்கின்றது
கண்ணில் மறைகின்றது - அது
காட்சி விலகின்றது.

●●●

- சிக்கந்தர் அகமது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் வேண்டும்.

மக்கள் நலனைக் குறியாக்கி
மண்ணிற் சேவை மனங்கொண்டு
தக்கோர் தலைமைப் பதவியதால்
தரணியில் பணிகள் புரிதற்கு
பக்க சார்புக் கொள்கையிலா
பண்பை அன்பை விதைத்துண்மை
மிக்க சேவை செய்வோரே
மண்ணில் தலைவராகிடனும்.

பதவி சொகுசுப் பானத்தை
பருகிப் பருகி மமதையிலே
உதவும் மனமேயில்லாது
உள்ளது சுருட்டிப் பெருத்திங்கு
அதவுகெட்ட தோழமையை
அடியாளாக்கி வல்லோனாய்
இதயம் செத்த மனிதர்களால்
இழிவேயன்றி நலமேது?

வல்லோனிறை அமானிதமே
விரைந்து கிட்டும் பதவிகளாம்
இல்லார்க்குதவும் மனமின்றி
இறையின் பொருத்தம் பாராது
பொல்லாப் பணத்தை விலைபேசி
பறித்துழைக்கும் கயவர்கள்
நல்ல தலைவர் நாமத்தில்
நாடு பெற்றால் விடிவேது?

இன்று சமுகம் வேண்டுவது
இனமொற்றுமை மக்களிலே
நன்று விதைத்துப் பகைநீக்கி
நன்மைச் செயல் புரிந்துண்மை
நின்றுழைப்போர் வேண்டுமென
நினைத்து நல்லோரேங்குகிறார்
கன்றுயில்லாத் தாயதுபோல்
கதறும் நிலைதான் மாறிடுமா?

கண்ணை மூடித் தேர்ந்திட்ட
கயமைத் தலைமையினி வேண்டாம்
எண்ணில் செயலில் மக்களுக்காய்
எழுச்சிபெற வுழைப்போரை
மண்ணில் பூக்க விதை நடுவோம்
மறந்தும் போலியில் மயங்காது
பண்புத்தலைவர் இனித்தோன்ற
பதியில் துணிவாயெழுவோமே!

●●●

**- மருதூர் ஜமால்தீன்.**



# ஏற்றாத விளக்குகள்.

மனமுடைந்து மனம் - இவ்
மாலை இருளுக்குள் குந்தி
கவலை தலை கடந்து செல்ல
விழி நீர் சுரந்து இமை தாண்டி
கன்னத்தை நழுவித் தழுவி

கூனி உடலாகி - இவ் (க்)
குவலயத் தவங்களில்
தன்னை பிணமாக்கி
உடல் மெலிந்த கட்டையுடன்
ஒப்பாரி பசியாகி

மகளீர் வம்சம் - இவ் (ம்)
மண்ணுக்கு பூத்து மணக்கவும்
கன்னி கழியப் போக்கவும்
வள்ளலாம் தன்மை
யாருக்கும் பிறக்கவில்லை

அழகு வடித்த - இவ்
உலகத்துக் கன்னியர் - இன்று
உள்ளம் வெதும்பி
உருகி மாய்வது
உங்களுக்கு திருப்திதானே?

தரையில் பூக்காத - இவ்
இளைய கொடிகளுக்கு
தேய்வில்லாத வாழ்வளிக்க
என்னதான் செய்தீங்க!

இன்று...
வேண்டுதல் களைத்து - இவ்
வேதத்திலே மலடாகி - மனம்
நொந்த விரக்தியுடன்
ஏற்றாத விளக்குகளாய்.

●●●

**- மருதமுனை முனாஸ்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● சுமதி.
தென்காசி, தமிழ்நாடு.

# என் ஜீவனே...

நான் இன்னும் ஆழ்ந்த
நித்திரையில் தான் இருக்கின்றேன்...
நீயோ என்னென்னவோ பேசிக்
கொண்டிருக்கின்றாய் என்னுள்ளே...

என்னால் பதில் கூற இயலாமல்
மௌனத்தை மட்டுமே பதிலாக
உரைத்துக் கொண்டிருக்கின்றேன் உன்னிடம்...

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு
விதமான கேள்விகள்
உனக்குள் மட்டும் எப்படி எழுகின்றது?

அழுந்த பற்றி கொண்டு
கலவியில் இருக்கின்றதோ இமைகள்
இத்தனை இறுக்கம் அவைகளுக்குள்
வேறு எப்படி வர்ணிப்பது தெரியவில்லை...

இமைகள் தழுவிக் கிடந்தால் நான் நித்திரையில்
இருப்பதாக அர்த்தமாகிவிடுமா என்ன?
எனக்குள்ளும் கேள்விகள்
எழத் தொடங்கி விட்டன!

எனக்குள்ளே இருக்கும் உன்னை
ஏன் யோசிக்க மறந்து போனேன் நான்...
உன் கேள்விகள் அத்தனைக்கும் விடை தெரியாமல்
நீ எப்பொழுதுமே செல்வதில்லை நித்திரைக்கென!

அதனாலேயே,
உன் கேள்விகளுக்கு விடை தேடி விக்கிரமாதித்தன் போல்
ஒரு பயணம்தான் மேற்கொள்ள வேண்டும்போல்
உனை சுமந்து கொண்டே என் ஜீவனே...
●●●

- சுமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து முஸ்லிம்களின் சிற்றிதழ்கள் - ஒரு பார்வை.

- ஏ. எம். கஸ்புள்ளா.

ஈழத்து இலக்கிய பரப்பில் எழுத்தாளுமைகளின் ஆரம்ப தளமாக, களமாக இலக்கிய இன்ப பசிக்கு தீனிபோட்டது சிற்றிதழ்களாகும்.

சமூகத்தில் இலக்கிய வாதியென முத்திரை பதிக்கப்பட்ட ஒருவர் எவ்வாறு தான் கற்ற ஆரம்ப பாடசாலையை மறக்க முடியாதோ அதுபோல ஒருவரின் முதல் ஆக்கம், அது பிரசுரமான இதழ் என்பவற்றை மறத்தல் என்பது எவருக்குமே முடியாததாகும்.

1970 இலும் அதற்குப் பின்னரும் புலமை சார்ந்த எழுத்தாளர்களை சுமந்து சிற்றிதழ்களின் வரவு அதிகரித்த தன்மையை தகவல்களின் அடிப்படையில் பார்க்கலாம்.

புதுக்கவிதையின் தோற்றமும் அது கொண்ட வேகமும் பல எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கு வித்திட்டது.

காத்தான்குடி மதியன்பன் மஜீதின் **முக்கனி** (1986), கல்குடாவிலிருந்து **இலக்கு** (1987), சாய்ந்தமருதிலிருந்து **நவயுகம்** (1980), **சோலை** (1983), **அல்-ஹுதா** (1984), றாபியின் **புள்ளி** (1987), எம். எம். எம். பாயிஸின் **புதுச் சுவர்** (1988), ஒலுவிலிலிருந்து ஒலுவில் அமுதனின் **புதுக்குரல்** (1983), கல்முனையிலிருந்து முபாறக்கின் **அல்-ஜெஸீரா** (1986), மட்டக்களப்பிலிருந்து முர்ஷித்தின் **பசுமை** (1990), ஓட்டமாவடி அறபாத்தின் **சஹ்வா** (1992), ஈழக்குயில் இத்ரீஸ் - உக்குவளை அக்ரம் ஆகியோரின் **காலமுரசு** (1999), கல்முனையிலிருந்து ஆர். எம். நபீல், கதீர், அபார் ஆகியோரின் **பூவிழி** (1990), சோலைக்கிளி அதீக் - எச். எம். பாறூக் ஆகியோரின் **இருப்பு** (1992), எஸ். றபீக்கின் **இலக்கியா** (1996), ஒலுவில் மின்னல் வெளியீட்டகத்தின் **கீறல்** (1992), அக்கரைப்பற்று பௌஸரின் **மூன்றாவது மனிதன்** (1996) போன்ற ஏராளமான சஞ்சிகைகள் வெளியாகின.

1970ஆம் ஆண்டு காலப் பகுதியில் பேராசிரியர் எம். ஏ. நுஃமான் அவர்களின் இணைத் தொகுப்பில் வெளியான **கவிஞன்** சிற்றிதழ் காத்திரமான படைப்பாளிகளைக் கொண்ட ஒரு கவிதைக்கான சிற்றிதழாகும்.

1970ற்குப் பின்னால் ஆர். எம். நௌசாத்தின் **தூது** (1987) மற்றும் கவிஞர் அல்-அஸுமத்தின் **பூபாளம்** போன்ற சிற்றிதழ்களும் குறிப்பிட்ட இதழ்களுடன் குதூகலம் கண்டு பின் நின்று போயின.

இவ்வாறான சிற்றிதழ்கள் பொருளாதார சிக்கல்கள், அரசியல் மாற்றங்கள், வாசகர்கள் ஒத்துழையாமை, நாட்டில் ஏற்பட்ட பிணக்குகள் என்பன அதன் நீடியாத தன்மைக்கு காரணமாக அமைந்திருக்கும் என்ற ஊகிப்புக்கு எம்மால் வர முடியும். அதையும் தாண்டி பல தஸாப்தங்களை கடந்து வசீம் அக்ரமின் **படிகள்** மற்றும் றிம்ஸா முகம்மதின் **பூங்காவனம்** போன்ற சஞ்சிகைகள் நிலையான இடத்தை தக்க வைத்திருப்பது பாராட்டக் கூடிய விடயமாகும்.

இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் இலக்கிய சிற்றிதழ்களின் கருப் பொருளை நோக்குகின்ற போது அது சமயம் சார்ந்த, சமூகம் சார்ந்த அவர்களது வாழ்வியல் சார்ந்த பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது. மேலும் காதலை வெளிப்படுத்துகின்ற தனிக் கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழாகவும் பல்சுவை இதழாகவும் வலம் வந்ததை அவதானிக்கலாம்.

சஞ்சிகைகளின் அமைப்பைப் பொறுத்த வரை ஆரம்பமாக கையெழுத்துப் பிரதியாகவும் பின்னர் ரோனியோ தட்டச்சாகவும் பரிணாமம் பெற்றுள்ளது. இன்று அது நவீன முறையில் கணனி மூலம் பிரதிகள் செய்யக் கூடிய வழிவகைகள் நாளுக்கு நாள் வளர்ந்துள்ளதை காணலாம்.

இச்சிற்றிதழ்களின் வெளியீட்டு அமைப் பானது மாத இதழ், இருமாத இதழ், காலாண்டு இதழ், அரையாண்டு இதழ், வருட இதழ் என பயணித்து நிற்பதையும் அறியலாம்.

இங்கு சில இதழ்களை அதன் வளர்ச்சி பற்றிய சிறியளவிலான தகவல்களை பகிர்ந்து கொள்ள விளைகிறேன்.

அந்த வகையில் 1970இல் எம். எச். எம். அஷ்ரப் அவர்களை பிரதம ஆசிரியராகவும் அன்பு முகைதீன், எம். ஏ. எம். முஸ்தபா ஆகியோரை இணை ஆசிரியர்களாகவும் கொண்டு **சமத்துவம்** மாத இதழ் கல்முனையிலிருந்து வெளிவந்தது. 12 இதழ்கள் வெளிவந்தன.

1977-1978 காலப்பகுதியில் சத்தார் எம். பிர்தௌஸ், எம். ஐ. ஏ. ஜப்பார், றஹ்மான் ஏ. ஜப்பார், அறநிலா ஆகியோர் இணைந்து **சரம்** என்ற சஞ்சிகையை மருதமுனையில் வெளியிட்டனர். இரு இதழ்கள் மாத்திரமே வெளிவந்தன.

1978 ஏப்ரல் முதல் **வெண்ணிலா** என்ற பெயரில் கலை இலக்கியச் சஞ்சிகை மருதமுனையிலிருந்து பிரதம ஆசிரியர் எஸ். ஏ. கப்பார் (காவியன் என்ற புனைப்பெயரில்) அவர்களினால் வெளியிடப்பட்டு 12 இதழ்கள் தொடராக வெளிவந்தன. அதே ஆசிரியரின் முயற்சியினால் 43 வருடங்களின் பின் மீண்டும் வெண்ணிலா சஞ்சிகை **வெண்ணிலா கவிதை மஞ்சரி** என்ற பெயரில் 2021 ஏப்ரல் முதல் வெளிவரத் தொடங்கி இன்று எட்டாவது இதழ் உங்களது கைகளில் தவழ்கிறது.

1983 ஜனவரி முதல் 1984 செப்டம்பர் வரை **கோகிலம்** சஞ்சிகை எம்சியே பரீத் அவர்களை ஆசிரியராகவும் தம்பிலுவில் ஜெகா அவர்களை துணையாசிரியையாகவும் கொண்டு சாய்ந்தமருதிலிருந்து வெளிவந்தது. 6 இதழ்கள் வெளிவந்தன. அக்காலப் பகுதியில் இச் சஞ்சிகை பெரிதும் வரவேற்பைப் பெற்றிருந்தது.

1988 ஜூலை முதல் 2009 வரை **சமாதானம்** சஞ்சிகை மருதூர் வாணர் அவர்களினால் வெளியிடப்பட்டது. தொடர்ந்து 16 இதழ்கள் வெளிவந்தன. இதற்கு முதல் **தேன்மதி** (1968) என்ற கையெழுத்துச் சஞ்சிகையினையும் மருதூர் வாணர் அவர்கள் வெளியிட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1988 இல் மருதமுனை எம். ஐ. ஏ. ஜபார் அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு **ஆகவே** இலக்கிய சஞ்சிகை திருகோணமலையிலிருந்து வெளிவந்தது.

மருதூர் பாரி மற்றும் எம். ஐ. எம். றஊப் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு 1998 இலிருந்து 2004 வரை **முனைப்பு** இலக்கியச் சிற்றிதழ்கள் 12 மருதமுனையிலிருந்து வெளிவந்தன. இவ்விதழ்களில் வெளிவந்த அனைத்துப் படைப்புகளும் மிக ஆழமானவையாகவும் ஆய்வுக்குரியனவாகவும் காணப்படு கின்றன.

ஏ. ஆர். ஏ. றாசிக், ரீ. எல். எம். இஸ்மாயில் ஆகியோரை பிரதம ஆசிரியர்களாகக் கொண்டு **சங்கு** கையெழுத்துச் சஞ்சிகை ஒன்றும் 1970இல் மருதமுனையிலிருந்து வெளியானது. மருதமுனையிலிருந்து **மருதமலர்** என்ற மற்றுமொரு சஞ்சிகையும் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றதாகும்.

1998இல் எம். சி. எம். அப்துல் காதிரின் **அல்-மருதமுனை** இலக்கியச் சஞ்சிகை ஒரு தகவல் களஞ்சியமாக வெளிவந்து மருதமுனை மக்களிடையே பெரிதும் வரவேற்பைப் பெற்றது.

1984ம் ஆண்டு **தடாகம்** கலைமகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹிதாயாவை ஆசிரியராகவும், அஷ்ரபா நூர்தீனை துணை ஆசிரியராகவும் கொண்டு, சாய்ந்தமருது, கல்முனை என்ற முகவரியிலிருந்து வெளியானது. இச் சஞ்சிகையின் 1989ம் ஆண்டு சிறப்பிதழின் அட்டையை தமிழிலும் ஆங்கிலத்திலும் கவிதை எழுதிய கல்ஹின்னை எம். எச். எம். ஹலீம்தீன் அலங்கரிக்கிறார். இவ்விதழில் குறிஞ்சி தென்னவன், ஏ. பி. வி. கோமஸ், மேமன்கவி, அந்தனிஜீவா, ஸ்டெலா மேரி உள்ளிட்ட பலரும் எழுதியுள்ளனர்.

நிதானிதாசன் - ஆர். எம். இம்தியாஸை பிரதம ஆசிரியராகக் கொண்டு, டி. எஸ். சேனாநாயக்கா வீதி, கண்டியிலிருந்து **விடிவு** இலக்கிய சஞ்சிகை 1988இல் வெளிவந்துள்ளது.

கலா விஸ்வநாதன், ஈழகணேஷ், கஸ்ஸாலி, அஷ்ஷம்ஸ், நாகபூஷணி கருப்பையா, கோவை அன்ஸார் உள்ளிட்ட பலரின் ஆக்கங்களை **விடிவு** சஞ்சிகை சுமந்து வந்தது.

**தடம்** - மூன்றாம் இதழ். இது 1993 இல் எம். பௌஸரை ஆசிரியராகக் கொண்டு அக்கரைப்பற்றிலிருந்து வெளிவந்துள்ளது. சசிதரன், மு. பசீர், எம். கே. எம். ஷகீப், கவிப்பிரியா, நிஷா போன்றோரின் ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

**இளம்பிறை** இலக்கிய சஞ்சிகை ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பிலிருந்து 1960களின் நடுப் பகுதியில் வெளிவர ஆரம்பித்தது. மீண்டும் அது 1971இல் மார்ச் இதழாகவும் மலர்ந்தது. இதன் ஆசிரியர் எம். ஏ. ரஹ்மான் தரமான பல இலக்கிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

எழுத்தாளரும் கவிஞருமான எல். வஸீம் அக்ரம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட, பொன்மலர் கண்ட **படிகள்**. சிங்களம் பேசும் மக்கள் செறிவாக வாழும் அநுராதபுரத்திலிருந்து, தமிழ் இலக்கிய சஞ்சிகையான **படிகள்** வெளிவர ஆரம்பித்து, அதன் பொன்மலர் பூத்திருக்கிறதென்றால் அது சாதாரணமானதொரு விடயமல்ல.

இலக்கியத் தடம் பதிந்திருந்த வடமத்திய மாகாண சிறப்பு நகரில் எழுபதுகளில் கலை, இலக்கியத்தை தூக்கி நிறுத்தியதில், அநுராதபுரம் கலைச் சங்கத்தினதும், அதன் இணைச் செயலாளர்களான அன்பு ஜவஹர்ஷா, பேனா மனோகரன் ஆகியோரினதும் பன்முகப்பட்ட தொடர் பங்களிப்பை வரலாறு என்றும் பேசும். அதன் நீட்சியாக **படிகள்** வேரூன்றியமைக்கு இலக்கியவாதியும் அரச பணியாளருமான வஸீம் அக்ரம் ஆசிரியராக அமர்ந்ததும் அவருக்குக் கிடைத்த பக்கபலமும் காரணமெனலாம்.

இலக்கியப் பணி என்பது பெயர் ஆசைக்காகச் செய்யும் ஒரு காரியமல்ல. அதற்கொரு சமூகப் பொறுப்புண்டு. அதை விளங்கிக் கொண்டதனால்தானே சமூகமாற்றம் வேண்டி நிற்கும் கல்வி, இலக்கியம் சார்ந்த மனித நேயப் பேராசிரியர்களான சோ. சந்திரசேகரம், எம். ஏ. நு..மான் ஆகியோர் **படிகள்** அட்டையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

ஐம்பதின் வரவோடு அச்சீட்டுப் பிரச்சினைகளும் மேற்கிளம்பியுள்ளன. ஆனாலும் **மல்லிகை**யும் டொமினிக் ஜீவாவும் எதிர் கொள்ளாத பிரச்சினைகளா இவை? என்று எண்ணத் தோன்றுகிறது.

எதையும் போராடித்தான் வெல்ல வேண்டுமென்பதுதானே யதார்த்தம். **படிகள்** - 51வது இதழும் விரைவில் மலர இருக்கிறது.

கிண்ணியா மண்ணில் பல சிற்றிதழ்கள் கையெழுத்துப் பிரதியாகவும் கணினி வடிவமைப்புடனும் வெளியீடு செய்யப் பட்டுள்ளன. **மலர்விழி** எஸ். ஏ. முத்தலிப் பிரதம ஆசிரியராகவும் எம். ஐ. எம். தாஹிர் உதவி ஆசிரியராகவும் கொண்டு 1958 இல் கையெழுத்துச் சஞ்சிகையாக வெளியானது.
1961இல் **முத்து** மாத இதழ் எம். ஐ. எம். தாஹிர் ஆசிரியராகவும் உதவி ஆசிரியராக ஸாலிஹ் அவர்களும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைய தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் வெளியீடு செய்யப்பட்டது.

**தியாகி** மாத இதழ் 1964 இல் முற்போக்கு வாலிபர் மன்றத்தால் வெளியீடு செய்யப்பட்டது. இதன் ஆசிரியராக எஸ். ஏ. முத்தலிப் சேர், உதவி ஆசிரியராக எம். ஐ. எம். தாஹிர் சேரும் இணைந்து இதழை வழி நடத்தினார்கள். அவர்களின் காலத்திலே அச்சஞ்சிகைகள் குறிப்பிட்ட இதழ்களோடு நின்று விட்டன.

**ஊர்க் குருவி** என்ற சிற்றிதழ் கிண்ணியா அமீரலியை ஆசிரியராகக் கொண்டு 1987 இல் ஹைக்கூ இதழாக பயணித்தது. "உங்கள் கைக்கு எங்கள் ஹைக்கூ" என்ற மகுட வாசகம் தாங்கி பல இதழ்கள் வலம் வந்தன. பிற்காலத்தில் பறக்க முடியாமல் தவித்தது.

அதுபோன்று 1987 இல் **குறுநகை** வெளியானது. ஆரம்ப காலத்தில் இதன் பிரதம ஆசிரியராக எஸ். ஏ. முத்தலிப் சேர் அவர்கள் கடமை செய்தார். அதைத் தொடர்ந்து அதன் பிரதம ஆசியராக ஏ. எம். ஏ. றசூல் அச்சஞ்சிகை வழிப்படுத்தினார். அதன் முதல் சிற்றிதழுக்கு திக்குவலை ரதீமா, மதிமகன் ஜாபீர், எம். ஐ. எம். ஜாபீர், திருமதி லறீனா ஏ. ஸலாம், எம். ராஜன், நசுருதீன், கலைக் காதலன், நஸார், மருதூர் ஜமால்தீன், சிட்மி, நவ்பர், ஏக்கணமலி, நூருல் ஹஸீனா ஹனிபா போன்றோரின் ஆக்கங்களைச் சுமந்து வெளியான **குறுநகை** காலாண்டு கையெழுத்து சஞ்சிகையாகும். இதுவும் குறிப்பிட்ட வருடங்களுடன் மறைந்து போனது.

மேலும் சமயம் சார்ந்த **பெண்புத்திமாலை** என்ற சஞ்சிகையும் அக்காலத்தில் வரவேற்பு பெற்றதாக விளங்கியது.
நிகழ்காலத்தில் **பேனா** சஞ்சிகை ஜெ. பிரோஸ்கானை ஆசிரியராகவும் **நிகழ் காலம்** சஞ்சிகை நாஸிக் மஜிதை ஆசிரியராகவும் **எறும்புகள்** சஞ்சிகை ஏ. கே. முஜாரத்தை ஆசிரியராகவும் **அண்ணல்** சஞ்சிகை ஏ. எம். கஸ்புள்ளாவை ஆசிரியராகவும் 2000ம் தொடக்கம் 2015 உற்பட்ட காலங்களில் தொடராக வெளிவந்து இன்று வரை மந்த நிலையில் காணப்படுகின்றன.

சமயம் சார்ந்த சஞ்சிகைகளும் இலக்கிய பரப்பில் நிலையான இடத்தை வகித்தன.

மேலும் றிம்ஸா முகம்மத் என்பவரை பிரதம ஆசிரியராகவும் எச். எப். றிஸ்னாவை துணையாசிரியராகவும் கொண்டு **பூங்காவனம்** என்ற இலக்கிய சஞ்சிகை பல இதழ்களை கடந்த நிலையில் பல காத்திரமான எழுத்தாளர்களை சுமந்து வீறுநடை போடுகிறது. ஒரு பெண்ணின் தனி ஆளுமையை இவ்விதழ் எடுத்துக் காட்டுகின்றது. பாராட்ட வேண்டிய தருணமாகும்.

அதுபோன்று மூதூர் முகைதீன் அவர்களை ஆசிரியராக கொண்டு இறுதியாக 2015 இல் வெளியிடப்பட்ட **ஓசை** சஞ்சிகையில் அறிவியல் மேதை அப்துல் கலாமின் அட்டைப் படத்தை தாங்கி உள்ளே பல கவிஞர்களின் கவிதைகளையும் கொண்டு அச் சஞ்சிகை அலங்கரிக்கப்பட்டுள்ளது. இதுவொரு கவிதை சிற்றிதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 2005 தொடக்கம் 2015 வரை வெளியான **ஓசை** சிற்றிதழ்களை ஒன்றிணைத்து அதில் எழுதிய 100 கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கி **சங்கமம்** என்ற கவிதை தொகுப்பை வெளியீடு செய்ததும் சிறப்பான விடயமாகும்.

2000 ஆண்டு முதல் அஸ்ரப் சிஹாப்தீன் அவர்களின் **யாத்ரா** கவிதைக்கான சிற்றிதழ் இலங்கையில் பிரபலமான கவிஞர்களின் கவிதைகளையும் குறிப்புகளையும் தாங்கி வெளிவந்த ஒரு காத்திரமான சஞ்சிகை. அதுவும் இடையில் நின்றுபோயிற்று.

இவ்வாறு முஸ்லிம் எழுத்தாளர்களின் சிற்றிதழ்களின் வளர்ச்சிப் போக்கினை அறியலாம்.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடித்தவற்றில் பிடித்தவை.

## மாயத் தோற்றம்.

திங்களை இரசிக்கப்
போனவன் பின்னே
ஞாயிறாய் மாறிவிட்டான்

தீமையை ஒழிக்கப்
போனவன் பாவ
மூட்டையைச் சுமந்து வந்தான்

"உங்களை மறவேன்"
என்றவள் வேறு
ஒருத்தனுடன் வந்தாள்

ஊமைப் பட்டம்
பெற்றவளே இன்று
ஓட்டை வாயானாள்

"பொங்கிய கவலை"
என்றவள் மறைந்து
புன்னகை புரிகின்றாள்

"போக்கிரி நாயெனப்"
பழித்தவனுடனே
ஓடித் தொலைகின்றாள்

தங்கிய வாடகை
வீட்டில் இருந்து
தன்னிலை மறக்கின்றார்

தாங்கிய கட்டையின்
ஆவி பறந்திட
தனியே நுழைகின்றார்.

•••

**- சம்மாந்துறை சந்தக்கவி.**

## பறவைகள்.

பறவைகளின் சிறுகூட்டுக்குள்
பகிர்ந்தளிக்க
ஏதுமில்லையென்பதாலும்
நாளை வீசும் புயலில்
சிதறினாலும்
மரத்திலிருந்து ஒரு
கூட்டுக் கொலை
அடுத்த வினாடி நிகழ்ந்தாலும்
சிரிப்பதையும் அழுவதையும்
அவை உணராமலேயே
ஒரு வாழ்க்கையை
வாழ்வித்துவிடுகின்றன.

அவற்றிற்கு வாழ்வென்பது
புலன்களின் தேவையில்
அடுத்தடுத்துப் பறப்பதும்
நொடிப்பதுமே தவிர
பெரிதாய் வைத்துப்போக
அவகாசமில்லை.

•••

மலேசியா
**- ஏ.தேவராஜன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● கே. பாலன்
வடக்கத்தியான் பட்டி.

# மழைக்காலத்து வாழ்க்கை.

மழைக்காலத்தில்
அந்த ஜன்னல் பக்கமாகத்தான்
அமர்ந்திருப்பேன்...

மேகத்திலிருந்து விடுபடும்
மழைத்துளியின் ஈரம்
ஜன்னலுக்கு வெளியே நின்றிருக்கும்...

இதமான கதகதப்பு
அறைகளில் அடர்ந்து கிடக்கும்
நகரத்தின் வீதிகளில்
வெளிச்சம் விரித்து படுத்திருக்கும்

குளிர்சாதன பெட்டியில் விழும்
மழைத்துளிகள் பழைய தகரவீட்டின்
சத்தத்தை ஞாபகப்படுத்தும்

ஜன்னல்களே இல்லாத வீடுகளில்
மின்விளக்கு மின்விசிறி
அறிமுகமில்லாத அறைகளில்
கடந்து போன இளமை காலங்களை...

இத்தனை வசதியோடு
வாழவேண்டுமென வைராக்கியம்
பாராட்டிய அப்பாவி
அப்பாவின் முகமும்
அம்மாவின் பேராவலும்
இரவெல்லாம் வந்து நிற்கும்...
தரகு வேய்ந்த கூரையும்

சாணி மெழுகிய தரையும்
மழை கரைத்தது போக
எஞ்சியிருக்கும் மண்சுவரும்
எத்தனை இதமான
தூக்கத்தை தந்து போனது...

கோடைமழையும்
கொளுத்தும் வெயிலிலும்
மார்கழி பனியும் மாசிக்குளிரும்
மச்சுவரை வரமுடியாத குச்சுபோல்
அடுக்கு மாடிக் குடியிருப்புகள்...

நெருங்கி நெருங்கி இருந்தாலும்
அறிமுகமாகிய அனாதைகளாகவே
அன்றாடம் ஓடிக்கொண்டிருக்கிறது
மழைக்காலத்து வாழ்க்கை...
●●●

- கே. பாலன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● ரத்னா.
இந்தியா.

# முதுமை.

அனைத்தும் கடந்தேறி வந்தாச்சு
காலத்தின் கடைநிலையில்
காவியம் பேச ஆர்வம் இல்லை...

காலாற நடைபோட
கைத்தடிக்கு பதிலாக
இணையரின் விரல் போதும்...

கொஞ்சி கொள்ள
பேரன் பெயர்த்திகள்
இல்லாவிட்டாலும் நம்மிடம்
தஞ்சம் கொள்ளும்
எவ்வுயிராகினும் போதும்...

சமைத்து பரிமாற நான்
ரசித்து ருசிக்க நீ...

தனிமைதனை மட்டும்
தந்துவிடாதே...

வறுமையென்றாலும்
ஈரத்துணியை கட்டிக்கொண்டு
உன்னோடு நானாக
என்னோடு நீயாக...
வெறுமையென்றால்
மார்போடு முகம்
புதைத்துக் கொள்வோம்...

நிறைவாக வாழ்ந்தால் பிறருக்கு
பகிர்ந்து கொள்வோம்...

நிலையில்லாத வாழ்வென்றால்
கண்ணீர் துளிகளை இருவருமாக
பகிர்வோம்...

இறுதி நிலையில்
இருவரும் முத்தமிட்டு
தொடங்குவோம் நமக்கான
இறுதி நாளை...

முதுமையை முத்தமிட்டு
வரவேற்போம்
இளமையை போல கொண்டாடி
தீர்ப்போம்...

தேகத்தின் தளர்வுகளில்
தோலின் சுருக்கத்தில்
மீண்டும் தொடங்கு
முதுமை காதலை நிறைவாக...
●●●

**- ரத்னா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● அ. முத்துசாமி.
தாரமங்கலம்.

# என்னைப் பற்றி நானே!

பொய்கூறித் திரிந்ததில்லை
புறம்பேசி மகிழ்ந்ததில்லை,
மெய்கூற மறந்ததில்லை
மேதினியைத் துறந்ததில்லை!

கடுஞ்சொல்லைச் சொன்னதில்லை
கடைகளிலே தின்னதில்லை,
கொடும்பகையைச் சேர்த்ததில்லை
கோலமயில் பார்த்ததில்லை!

அநியாயம் புரிந்ததில்லை
அதிகாரம் தெரிந்ததில்லை,
பணியாற்ற சலிக்கவில்லை
பலநிலையில் சொலிக்கவில்லை!

மதுப்பழக்கம் ஏதுமில்லை
மங்கைநட்போ தோதுமில்லை,
புகைப்பழக்கம் எனக்குமில்லை
பொழுதுபோக்க நினைக்கவில்லை!

ஆடம்பரம் கொண்டதில்லை
அனுபவமும் கண்டதில்லை,
கூடவிருந்தே பறித்ததில்லை
கொண்டநட்பை முறித்ததில்லை!

வாதுக்குச் சென்றதில்லை
வாழ்க்கையிலோ தென்றலில்லை,
தூதுக்கும் போனதில்லை
தொழிலாக வுமானதில்லை!

பழிகூறித் தூற்றவில்லை
பயன்கருதிப் போற்றவில்லை,
வழிமாறி நடந்ததில்லை
வசைமொழியைக் கடந்ததில்லை!

உழைக்கநானோ தவறவில்லை
உரையாற்றிக் கவரவில்லை,
பிழைப்பதற்கோ விருப்பமில்லை
புதுவாழ்வில் திருப்பமில்லை!

வருமானம் குறையவில்லை
வந்தபின்பும் நிறைவுமில்லை,
உருமானம் ஆகவில்லை
உயர்பதவிக்குப் போகவில்லை!

உடலெடையோ கூடவில்லை
ஒருமருந்தும் நாடவில்லை,
மடலெழுத நேரமில்லை
மணவாழ்க்கைப் பாரமில்லை!

●●●

**- அ. முத்துசாமி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேசத்துக்குரிய தனிமை!

காற்றைக் கிழித்து
காதலில் சிறகடிக்க
காத்திருக்கும் பொழுதில்
கூட்டைத் திறந்து
பாதையை மாற்றும்
கொடுப்பினையாகிடும்
துர்ப்பாக்கியம் துரத்தும்

அள்ளிப் பருக முடியாத
வெள்ளப்பெருக்காய்
அருகருகில் இருதுருவம்
காட்சிக்கு அழகாய்
பேச்சுக்கு குறைவாய்
தீண்ட இயலா இன்பமாய்

சிலுவையை சுமந்து பறக்க
சுகமாய் இருக்கிறது என்றா
சிரிக்கின்றது இதழ்
சிதைக்கப் பட்டாலும்
சிதறாமல் இருப்பதை விரும்புவதால்

உயிர்ப்புடன் ஒன்று உலவுகையில்
ஒவ்வாமை ஒன்றினை வார்த்தொடுத்து
உயிரை காயமாக்கும் சிலரால்
நேசம் பேயான உலகில்
நிர்ப்பந்தத்தால் கைகோர்க்கிறார்கள்

காலம் காயங்களை ஆற்றுமெனில்
வடுக்கள் அரிதார மிட்டுக்கொள்ளும்
தனித்து வந்த உலகில்
தனிமை மட்டுமே நேசத்துக்குரியது!
●●●

**- சிமாரா (ஊதாப்பூ).**



# தோற்ற பொழுதொன்றில்....

காலச்சதையெல்லாம்
கரைந்து விழுந்தாலும்
மன உச்சியில்
இப்போதும்,
சிறகுகள் முளைத்தபடி

அயற்சிகள்
ஆயிரக் கணக்கில் மூச்சிரைத்தவாறே
துரத்திக் கொண்டு ஓடிவர

கனவுகளின்
கழுத்தை இறுக்கும்
காலத்திடம்,
மண்டியிடக் கூடாதெனும்
பிழைத்தலின் பொருட்டே
தோற்ற பொழுதுகள்

சிறகுகளின் சிடுக்குகளாகி
இன்னும் சற்று
அபாரமாய்,
முயற்சித்து விரிகின்றன
ஏ...ய் கனவே!
உனைக் கலையாமல்
பாதுகாப்பேனெனும் இயலுமையை
உரைத்தபடி
●●●

**- வானம்பாடி முஜா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● மாலதி வெங்கடேசன்.
இந்தியா.

# தனிமை.

எனக்கென்ற சில
நேரங்களைக் களவாடிக்கொள்ள
விழைகிறேன்!!

நானும் தனிமையும்
என்ன வேண்டுமானாலும்
செய்து கொள்வோம்!!
அங்கு எந்த கடமையோ
நேரம் பார்த்து செய்ய
வேண்டிய பணிகளோ
இருந்திட தேவை இல்லை!!

யாரும் உட்புகா வண்ணம்
பிடித்த பாடல்களிடமோ
நாவலாசிரியரிடமோ
ஒரு கோப்பை தேநீரிலிலோ
எப்படி வேணுமாகினும்
அமைத்து கொள்ள
சுகமான போதுகளவை!!

கால் நீட்டி உடல் தளர்த்தி
விருப்பம் போல்
யாருக்கும் உட்பட்டிருக்க
தேவையின்றி இருக்க
விரும்புகிறேன்.
அந்த நிமிடங்களை
மட்டும் யாருக்கும்
விட்டு கொடுக்க
விருப்பமும் அவசியமும்
இல்லாதிருக்க வேண்டும்.

தனிமை சில நேரம் இனிமை.
●●●

**- மாலதி வெங்கடேசன்.**

●● தீரன்.

# காலப் பெரு நதி.

பெருநதிப் பரப்பில்
சிறு இலை மீதில்
ஒரு தனி எறும்பு

மறுகரை சேர
உயிர் கரம் பிடித்து
நதி கடக்க நகரும்

நதி அலை மீது
இலை தடுமாறி
மறு கரை சேருமோ

நெடுவொரு நாளில்
கரை சேரும் போதில்
அதன்
உயிர் விதி எழுத
கரையிலொரு கண்டம்

ஒரு இறை ஞானம்
தரும் பொருள் விளங்காச்
சிறு எறும்பு விதி முடிய

காலப் பெரு நதியில்
கலந்திறையடி சேரும்.
●●●

**- தீரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● கனியமுது அமுதமொழி.
இந்தியா.

# சொற்கள்.

காலடியில் இறைந்து
கிடக்கிறது பல சொற்கள்
அவைகளை அவசரமாய்
மிதித்து கடக்கிறேன்

பாதமதில் ஒட்டிக்கொண்ட
சில சொற்கள் உடன்
பயணித்து தொலை
தூரம் வந்து விட்டன

கடக்க முடியாத
இரவையும் பகலையும்
சுமந்து திரியும் என் முதுகில்
அவை பாரமாய்
அழுத்தி அழுத்தி
சுவாசத்தினை இறுக்கி
சூரியனைப் பிழிந்து விட்ட
வெட்கை காந்தலில்
சுருண்டு நெளிகின்றன.

அவைகளை இறக்கிவிட்டு
ஆசுவாசம் கொள்ள
ஓர் இடம் தேடுகிறேன்.

சுருண்டிருக்கும் அவை
எங்களையும் இறக்கிவிட்டு
என்ன செய்வாய்
உன் கதை சொல்ல
என கேட்டதில் அவைகளை
சுமந்தே திரிகிறேன் ஏகாந்தியாய்.

செல்ல வேண்டிய தூரமும்
சொல்ல வேண்டிய
கதைகளும் உடன் வர.
●●●

**- கனியமுது அமுதமொழி.**

●● ராம்ப்ரசாத்.
சென்னை.

# பரிச்சய முகமூடிகள்.

கடந்தகால நிகழ்வுகளை
பரிச்சய முகமூடியிட்டு
மறைத்து விடுகிறான்
சுயநலக்காரன்...

முகமூடிகளுக்குப் பின்னால்
அந்த நரிகள்
வேட்கையோடு காத்திருக்கின்றன
சந்தர்ப்பங்களுக்கென...

பரிச்சயங்கள் தோறும்
உணர்வுத்திரைகளை மென்மையாய்
கையாளும் பொருட்டு
முகமூடிகள்
அங்கீகரிக்கப்படவே செய்கின்றன...

முகமூடிகளுடன் பதுங்கிவரும்
நரிகள் சரியான நேரத்தில்
பாய்ந்து குதற
தவறுவதில்லைதான்...

முகமூடிகளை விலக்கிப்
பார்த்தல் மிக மிக
அவசியமென்பது
அறிவின் எல்லைக்குட்பட்டதுதான்...
●●●

**- ராம்ப்ரசாத்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●● கவி செல்வா.
திருச்சி.

# அப்பா!

பத்தரமாத்து தங்கம் ஒண்ணு
காணாம போச்சி
கதறி என்னை அழ வச்சி
போனதே மூச்சி
அப்பா போனதே மூச்சி

உங்க அறுந்து போன
செருப்பு ஒண்ணு
கொல்லையில கிடக்கு
நீங்க ஆடு மேச்ச அலக்கும் கூட
அங்க தான் கிடக்கு

வண்டி மாடு ரெண்டும் நின்னு
வழிய பார்க்குது அப்பா
நீங்க வருவீங்கன்னு வாசலையே
வெறிச்சிப் பாக்குது

தேக்கு மரங்கள் தேடி தேடி
தேம்பி அழுவுது தென்னை மரங்கள்
நாலும் இங்கே நின்னு அழுவுது

கெணத்து தண்ணி ஊறி ஊறி
கெடந்து கதறுது
நீங்க வளர்த்த நாயும்
வாய் விட்டு அழுது புரளுது

உங்க கிழிஞ்சிப் போன
வேட்டித் துணியில்
விளக்கு எரியிது
நீங்க கழட்டிப் போட்ட
சட்டைத் துணியில் காசு கிடக்குது

சொத்து சுகம் தேடி வச்சி
எங்க போனீங்க அப்பா
பத்தரமா தூங்கத்தானா
பாடையில் போனீங்க!
அப்பா பயணம் போனீங்க...
●●●

**- கவி செல்வா.**

●● எச். ஜி. ரசூல்.
இந்தியா.

# குறத்தியின் முத்தம்.

ஓயாமல் தன்னை அலங்கரித்துக்
கொண்ட
கற்சிலையொன்று
தொலைந்துபோன தன் சிற்ப
மொழிக்காய்
அழுதது.

தன் உடலின் பேரெழிலை
நிர்வாணப்படுத்தி காண்பித்த
சிற்பியின் நிர்வாணத்தை
அம்பலப்படுத்தி
மனதுக்குள் செதுக்கிப்பார்த்த
தருணங்களில்
தன் தலைமீது உட்கார்ந்து எச்சமிட்ட
காகத்தின் பாடலை
தொலைதூரத்தில் விசிறியடித்தது.

தனிமையின் நோவில் தளர்ந்தும்
பெருகிவந்த வேட்கையின் அதிர்வால்
தன் இருப்பிடம் விட்டகர்ந்த
கற்சிலை
குறத்தியின் உடல்நோக்கி
இரவொன்றில் நடந்துவந்தது.
குறத்தி கற்சிலையாக
கற்சிலை குறத்தியானது.

மலையடிவாரங்களில்
பசுமையைப் போர்த்திக் கொண்டு
தாவரங்கள் இசையொலித்தன
இசையொலியாய் உருமாறிய
கற்சிலை
குறத்திக்கு தந்தாள்
மீண்டும் முத்தம்.
●●●

**- எச். ஜி. ரசூல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை...

- றியாஸ் குரானா -

கவிதை என்பது, பில்லி சூனியம் செய்வினை.

இதுவரை காலமும் நவீன கவிதைகளாகப் பாவிக்கப்பட்ட பிரதிகளோடு நாம் அதிகமும் கலந்துவிட்டோம். மிக நெருக்கமான பழக்கத்தையும் உருவாக்கிவிட்டோம். பொதுப்பரப்பில் ஆரம்ப நிலை இலக்கியச் செயற்பாட்டாளர்களும் உற்பத்தி செய்யும் அளவிற்கு அதன் அனைத்து நுணுக்கங்களையும், தொழில் நுட்பங்களையும் எல்லோரும் கண்டடைந்து வைத்திருக்கிறோம். இன்று நவீன கவிதையைத் தயாரிப்பது எதுவித சவாலையும் கொண்டிருக்கவில்லை. அதன் உருவாக்கம் கைவந்த கலையாக, பிரக்ஞையற்ற நிலையிலும்கூட உருவாக்கப்படக் கூடியளவில் தனது ரகசியத்தை இழந்திருக்கிறது.

எந்த வகையிலும் நவீன கவிதைகள் இன்று நமது கவிதை வாசிப்பின் பிரக்ஞையைத் தொந்தரவு செய்வதில்லை. நமது புரிதல் நிலையின் சமன் குலைப்பதில்லை. பழக்கப்பட்ட பிரதிகளை அல்லது கவிதையாக நம்பப்படும் பிரதிகளோடு பொருந்திப் போகிறவற்றை ஏற்றுக்கொள்வதும், அவற்றையே மறு உறுதி செய்து கொண்டாடுவதுமான ஒரு பயில்தல் முறை இங்கு நிலைகொண்டிருக்கிறது. பழக்கப்பட்ட மிகப்பழைய பிரதி என்பது நமது புரிதலை அடுத்த நிலைக்கு நகர்த்த உதவுவதில்லை. புரிந்துகொள்ளுவதற்கான ஆற்றலை, அதற்குத் தேவையான உழைப்பைச் சக்தியற்றுப் போகச் செய்வதைத் தவிர வேறு உத்திகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதில்லை.

இதை மாற்றியமைக்க, வாசிப்பு என்பதை எழுதுதல் என்பதற்கு இணையான செயலாக மாற்றவேண்டியுள்ளது. கவிதைப் பிரதிகள் புரிதலின் மேலதிக உழைப்பைக் கோரும் நிலையில் செயற்படுகிறது என்றே கருதுகிறேன். வாசகர் பிரதியின் முன் நிறுத்தப்படுவது, அதை ஏலவேயுள்ள புரிதலுடன் ஒத்துப்போகிறதா எனப் பரிசோதித்துத் தீர்ப்பளிப்பதற்காக அல்ல. அதைக் கடந்து செல்லும் வகையில் பிரதிக்குள் உத்திகளைக் கண்டுபிடிக்கும் செயலுக்குப் பங்களிப்பதற்காகவே என்றும் நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையெனத் தான் நம்புவதற்கு இணையான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் பிரதிகளைக் கவிதைதான் என்று சொல்லவும், அதைக் குழப்பும் அம்சங்களைக் கொண்டிருக்கும் பிரதிகளைக் கவிதையல்ல என எடுத்தெறிந்து விடுவதற்கும் ஏதுவாகவே நமது விமர்சன மரபு அதிக ஆர்வம் காட்டி வந்திருக்கிறது. இது இன்றைய பின் நவீன உலகிலும் கொண்டாடப்படுவதை ஆதரிக்க நான் தயாரில்லை.

அண்மைக்காலமாகச் சிலர் இதுதான் கவிதை, இது கவிதை இல்லை என்றெல்லாம் சொல்லித்திரிவதைக் காணமுடிகிறது.

நாடுகள், சமூகங்கள், மதங்கள், இனங்கள், மொழிகள், பிராந்தியங்கள், காலகட்டங்கள் என இன்னும் பல அம்சங்களினால் வெவ்வேறு பிரதிகள் கவிதையாகப் பாவிக்கப்படுவதை அவர்கள் அறியும்போது, நாம் அவர்களோடு உரையாட ஆரம்பக் கட்டப் புரிதல் கிடைத்துவிடும் என்றே கருதுகிறேன். இப்படிப் பயன்படுத்துவதற்கு அவர்களிடம் பலகாரணங்கள் இருக்கிறது. ஆக, கவிதை என்றால் இது என்று சொல்ல முற்படுபவரிடம் நாம் கேட்க வேண்டிய ஆரம்பக் கேள்வி கவிதை என்றால் என்ன என்று புரிந்து வைத்திருக்கிறீர்கள் என்பதைத்தவிர வேறெதுவாக இருக்க வேண்டும்? அல்லது ஒரு பிரதியைக் கவிதையெனத் தீர்மானிப்பதற்கு உங்களுக்கு உதவியது எவை என்றுதானே கேட்கத் தோன்றும்.

முன்முடிவுகளைச் சரிபார்க்கவும், தீர்வுகளை வலியுறுத்தவுமான ஒரு பிரதி வாசிப்பு முறையே இன்னும் இங்கு விமர்சன முறையாகப் பழையவர்கள் தொடங்கி புதியவர்கள்வரை கொண்டாடப்படுகிறது. அப்படி அவர்களால் கொண்டாடப்படுவதாலே அதுதான் மாற்றீடற்ற சரியான முறைமை என்றாகிவிடாது. எனது பிரதிகள் சிலரால் கவிதை இல்லை என்றே சொல்லப்படுவதை அறிவேன். அதுவே எனது உழைப்பிற்குக் கிடைத்த வெற்றியென எடுத்துக்கொள்கிறேன். ஆனால், முற்றுமுழுதான கவிதை இல்லை என்று புறக்கணித்துவிடவும் முடியாது என்றும் சிலர் சொல்லுவதாக அறிகிறேன். இந்த இரு பகுதியினரின் கருத்துக்களையும் நான் ஒரு புள்ளியில் இணைத்துப் பார்க்கிறேன். ஆம், நவீன கவிதையென நம்பப்படும் சிறந்த பிரதிகளோடு போட்டியிடத் தக்க மாற்றுப்பிரதிகளை எழுதுவதாகவே அவர்களின் விமர்சனத்தைப் பார்க்கிறேன்.

கவிதையைப் புரிந்துகொள்ளும் செயலில் பங்களிப்புச் செய்யத் தக்க உரையாடல்கள் தேவை. அதற்கான ஒரு சிறு ஆரம்பமாகவே இதை எழுதுகிறேன்.

*04-10-2022.* ●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களிடமிருந்து




● **வெண்ணிலா** இதழ் மருதூர் முற்றத்திலிருந்து மணம் வீசுகின்றது,

இதழ் சுமந்திருக்கும் படைப்புக்களின் வல்லமை தகுதியான பெறுமதியைக் காட்டுகின்றது. முத்துக்களான கவிஞர்கள் எழுத்தாளர்கள் தமது போக்கில் தமக்குரிய பாணியில் களமிறங்கி கைவரிசையைக் காட்டியிருப்பது போற்றத்தக்கது.

தடம் பதித்த மூத்த கவிஞர்கள் எழுத்தாளர்கள் வளர்ந்து வரும் கவிஞர்கள். இன்னும் இன்னும்... ஒன்றிணைந்து **வெண்ணிலா** இதழை அலங்காரம் செய்து அழகு படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

புதிய படைப்பாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவரும் வரிகளைப் பார்த்து ஆனந்தப்பட்டபடி தொட்டு ஆசிர்வதித்தபடி உரையிலிருந்து முற்றுகை.

நிறைய விடையங்களைச் சுமந்துவரும் **வெண்ணிலா** இதழ் வாழ்க வளமுடன்.
என்றும் வாழ்த்துக்கள். ஆசிகள்.
**- கவிஞர் மருதமுனை முனாஸ்.**

● **வெண்ணிலா** இதழ் 7 கிடைத்தது. பெரும் மகிழ்ச்சி. இனிய நன்றி. கவிதைகள் அனைத்தும் ஒரு பிள்ளையின் விரலைப் பிடித்து ஒரு தாய் அழைத்துச் செல்லும் அனுபவம் போல அழகு. உங்கள் பணி தொடரட்டும் உங்கள் ஆயுள் ஆரோக்கியம் நீளட்டும்.

**வெண்ணிலா**

காகிதத்தில் ஒளிர்கிறாய் நீ
எனது இருளைப் போக்கும் உனக்கு
எனது கைதட்டல்கள்
எனது கையில் உதித்து
எனக்குள் ஒளி பாய்ச்சும் நீ மாயக்காரி
உன்னைக் கண்களால் தொட்டேன்
என் அறிவு பூத்தது
அகன்ற பரந்த வானம்
உனக்குக் கிடைத்தால்
நீ நிலைத்துப் பிரகாசிப்பாய்
நீ பூமியில் ஜொலிக்கிறாய்
இதயங்கள் வெளிச்சம் பெறுகின்றன
கைகளுக்குள் நீ ஒளிப்பூந்தோட்டம்
உன் இதழ்களைப் பறிக்கப் பறிக்க
சுவை கமகமக்கிறது
விழியை அழைத்து
அறிவுக்கு வெளிச்சவிருந்து கொடுக்கும்
அற்புத சமையற்காரி நீ.
**- ராஜகவி ராகில்.**

● தற்காலத்தில் கவிதை விளை நிலத்தின் வரப்புகளை ஒழுங்குபடுத்திக் கட்டிக் கொண்டிருக்கிறது வெண்ணிலா.
**- கவிஞர் டீன் கபூர்.**

● இறைவனை வேண்டிக்கொண்டவனாக. வெண்ணிலா இதழ் 07 இல் இருந்து எல்லாக் கவிதைகளையும் சுவைத்தேன். வெண்ணிலா இதழ் தொடர்ந்து வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். வெண்ணிலா இதழ் தொடர்ந்தும் மலர்ந்து கொண்டே இருக்க வேண்டும். இன்னும் பல புதிய படைப்புகளை படைத்து நிற்க வேண்டுமென வாழ்த்தி வரவேற்பதோடு வெண்ணிலா இதழ் வெளியீட்டினை மிகவும் பொறுமையோடு சீராக நிறைவேற்றி எங்கள் கரங்களில் தவழச்செய்துகொண்டிருக்கும் அதன் ஆசிரியர் அவர்களை வாழ்த்தி நிற்கின்றேன்.
நன்றி.

பெரியநீலாவணையூர்
**- தம்பிப்பிள்ளை நடேஸ்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கப்பெற்ற கவிதைத் தொகுப்புகள்




நூல் : குறுக்கு வேலி
ஆசிரியர் : ஜெஸீமா முஜீப்
பக்கங்கள் : 124
பதிப்பு : 2021
விலை : ரூபா. 500/=
வெளியீடு : ஓர் உயிரின் வெளியீடு
தொடர்பு : 076 1095726



நூல் : பெருக்கு
ஆசிரியர் : அலறி
பக்கங்கள் : 54
பதிப்பு : 2022
விலை : இந்திய ரூபா. 70/=
வெளியீடு : வேரல் புக்ஸ்
தொடர்பு : 077 9351334




நூல் : தண்ணீருக்கு எத்தனை கண்கள்
ஆசிரியர் : சோலைக்கிளி
பக்கங்கள் : 350
பதிப்பு : 2021
வெளியீடு : பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்
தொடர்பு : 077 1607056



நூல் : கடிகாரப் பறவைகள்
ஆசிரியர் : திருக்கோவில் கார்த்திகேசு
பக்கங்கள் : 118
பதிப்பு : 2022
விலை : ரூபா. 650/=
வெளியீடு : ASK திருவதிகை கலைக்கூடம்
தொடர்பு : 077 3794913

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை மாநகரில் (அமானா வங்கி முன்பாக) ...

- நேரடியாக சகலவிதமான விமான பயண டிக்கற்களை உடனடியாக பெற்றுக் கொள்வதோடு
- Budget & Economy வெளிநாட்டு சுற்றுலா ஏற்பாடுகள் (India, Maldives, Thailand & Europe)
- வெளிநாடு ஒன்றிற்கு குடிபெயர்வதற்கான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள்
- Other Air ticketing related services
- Hajj & Umra Arangements
- Visa related Assistances
- Student Visa Guidance




IATA

# mH Travels & Tours

Since 1986

*Ur Travel & Progress Companion*

No. 9, Main Street, Kalmunai. Hotline : 077 067 3062
Head Office : 323, Maccamady Road, Maruthamunai - 03. Tel : 067 222 9486
mhtravelsntours@gmail.com Tel : 067 205 9434, 075 808 9968

## Business & Tax consultation in the Heart of Kalmunai Town...

- Tax Planning
- Income Tax
- VAT / SVAT
- NBT / ESC (old)
- CGT
- PAYE / APIT (Employer)
- Agribusiness consultation
- Audit
- Accounts Preparation
- IAS / IFRS, LKAS / SLFRS Consultancy
- Book Keeping
- Outsourcing services
- POS Solution
- Cooperate Secretarial Services

# elite

**Biz & Tax Consultancy**

**No. 10, Main Street, Kalmunai. M : 077 067 3062**
**Tel : 067 205 9434, info@elitetaxcon.com, www.elitetaxcon.com**


இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை - 03, டிஜிட்டல் இன்ஃபர்மேஷன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் 289, பிரதான வீதி, மருதமுனை *Jesa Grafix* இல் அச்சிட்டு ஜனவரி 2023இல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org